மங்கையர், ஆடவர்
மனதைக் கொள்ளை
கொள்ளும்
வண்ண வண்ணப்பட்டு,
பருத்தி புடைவைக் கடல்
சீமாட்டி
ஜவுனி சமுத்திரம்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

பங்குனிகள் ஆறு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கல்யாண முகூர்த்தப்
புடைவைகளின்
கைராசியான ஸ்தாபனம்
சீமாட்டி
ஜவுளி சமுத்திரம்
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025. பங்குனி 26 வெள்ளிக்கிழமை (08 - 04 - 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 132

# பிக்குகள் 100 பேர் யாழ். வர முயற்சி!

## இங்குள்ள நிலைமையைநேரில் அறிவதுபிரதான நோக்கமாம்

கொழும்பு, ஏப்ரல் 8

தென்னிலங்கையைச் சேர்ந்த பௌத்த பிக்குகள் நூறு பேர் யாழ்ப்பாணத்துக்கு நல்லெண்ணப் பயணம் ஒன்றை மேற்கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் சென்று அங்குள்ள நிலைமைகளை நேரில் கண்டு தெற்கு மக்களுக்கு விளக்குவதும் —

தமிழ் — சிங்கள மக்களிடையே பரஸ்பரம் புரிந்துணர்வை ஏற்படுத்திச் சமாதானச் சூழ்நிலையை உருவாக்குவதும் — பிக்குமாரின் நல்லெண்ணப் பயணத்தின் நோக்கம் எனத் தெரிவிக்கப் படுகிறது.

1992 ஆம் ஆண்டு மார்ச்சில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த பத்து பிக்குமார் குழுவுக்கு தலைமை வகித்துச் சென்ற — தேசிய செல்வத்தைக் காப்பாற்றும் பிக்குகளின் அமைப்பின் தலைவரான — வண. மாதம்பாகம அஸ்ஸாஜி தேரரின் வேண்டுகோளுக்கு இணங்கி —

மொத்தம் 100 பிக்குகள் யாழ்ப்பாணம் செல்ல விருப்பம் தெரிவித்திருப்பதாக அறியப்படுகிறது.

யாழ்ப்பாணப் பயணம் சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை, (11 ஆம் திகதி) கொழும்பு விஜேராம மாவத்தையில் உள்ள விவசாய விரிவாக்க மண்டபத்தில் நடைபெற இருக்கிறது.

இந்தக் கூட்டத்தில் யாழ்ப்பாணம் செல்வதற்கான ஆரம்ப ஒழுங்குகள் குறித்தும், அங்கு செல்வதற்கு அரசாங்கம், மற்றும் விடுதலைப் புலிகள் இயக்கத்திடம் அனுமதி பெறுவது சம்பந்தமான ஏற்பாடுகள் குறித்தும் ஆராயப்படும். யாழ்ப்பாண விஜயத்துக்கான உத்தேச திகதியும்

( 6 ஆம் பக்கம் பார்க்க )

# என்னை எவரும் விரட்ட முடியாது

## சிறிசேன கூரே கூறுகிறார்

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து தம்மை எவரும் விரட்ட முடியாது என்று அமைச்சரும், ஐ. தே. க. பொதுச் செயலாளருமான சிறிசேன கூரே தெரிவித்திருக்கிறார்.

கொழும்பு மத்தி ஐ.தே.க. இளைஞர் கூட்டத்தில் பேசிய போதே அவர் இப்படிக் கூறினார்.

"முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸா காலத்தில் எந்தக் கொலை நடந்தாலும் அவர்மீதே குற்றஞ் சுமத்தினார்கள். இப்போது பிரேமதாஸா உயிருடன் இல்லாத காரணத்தினால் என்னைக் குற்றஞ்சாட்ட ஆரம்பித்துள்ளனர்.

"ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து நான் விலகவும் இல்லை; அப்படி எவரும் என்னை விலக்கவும் இல்லை. அப்படி விலகினால் கொழும்பு மத்தி வாக்காளர்களுக்கே முதலில் அறிவிப்பேன்" — என்றார் அவர். (இ-எ)

## பிளாம்பயான், நரோமா நேற்று வந்து திரும்பின

கொழும்பில் சிகிச்சை பெற்ற 14 பேருடன் நேற்றுக் காலை பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த 'பிளாம்பயான்' கப்பல் நேற்று மாலையே 15 நோயாளிகளுடன் திருகோணமலை நோக்கிப் புறப்பட்டது.

யாழ். ஆஸ்பத்திரிக்குத் தேவையான அவசர மருந்து வகைகளும் திருகோணமலையில் வைத்து இக்கப்பலில் ஏற்றப்பட்டு எடுத்துவரப்பட்டிருந்தன.

அதேவேளை — திருகோணமலையில் இருந்து ஒரு தொகுதி பயணிகளுடன் நேற்றுக் காலை "நரோமா" கப்பல் காங்கேசன்துறை வந்து சேர்ந்தது.

கொழும்பு செல்லும் ஒரு தொகுதி பயணிகளை ஏற்றிக்கொண்டு நேற்று மாலையே அதுவும் திருகோணமலை புறப்பட்டது. (இ-3-15-17

# அஷ்ரப்பும் அவரது கட்சியினரும் சபையிலிருந்து வெளிநடப்பு

கொழும்பு, ஏப். 8

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் விடுத்த கோரிக்கையை சபாநாயகர் எம்.எச். முஹம்மது ஏற்க மறுத்ததையடுத்து அஷ்ரப்பும் அவரது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் நாடாளுமன்றத்தை விட்டு வெளியேறினர்.

நாடாளுமன்றம் நேற்று சபாநாயகர் எம்.எச். முஹம்மதுவின் தலைமையில் கூடிய போது முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம், அஷ்ரப் உரையாற்றினார்.

அவர் அங்கு பேசுகையில் கூறியதாவது:-

கிழக்கில் நடந்த தேர்தலில் எனது தொகுதியில் உள்ள ஒரு பிரதேச சபையில் எனது கட்சி தோற்றால் எனது பதவியை ராஜினாமாச் செய்வேன் என அறிவித்திருந்தேன்.

அதன்படி எனது பதவியை துறக்க முன் இரண்டு மணித்தியாலயங்கள் பேச நேரம் ஒதுக்கித் தருமாறு விண்ணப்பித்திருந்தேன். எனக்கு இன்று (வியாழன்) பேச 45 நிமிடம் ஒதுக்கித்தரப்பட்டது.

தற்போதைய சட்டத்தின்படி நான் ராஜினாமாச் செய்தவுடன் எனக்கு அடுத்து பட்டியலில் உள்ளவர் எம். பியாக நியமனம் பெறுவார்.

எனக்கு அடுத்துள்ளவர் எமது கட்சியில் இருந்து நீக்கப்பட்டவராவார். இது தொடர்பாக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளோம்.

அந்த வழக்கு முடிந்த பின்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் 'நந்திமித்ர' ராணுவ நடவடிக்கை

திருகோணமலை மாவட்டம்— சின்னக்கிண்ணியாவின் மேற்குப் பகுதி காட்டுப் பிரதேசத்தில் இராணுவத்தினர் "நந்திமித்ர" இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை— இம் மாவட்டத்தில் முத்துச்சேனை என்னும் இடத்தில் படையினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர் என்றும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் கெமுனு குலதுங்கா தெரிவித்தார்.

இதனிடையில் — பலாலி இராணுவ முகாமில் இருந்து படையினர் ஆயிரம் மீற்றர் தூரம் முன்னேறிச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

### முச்சந்தி முரளி



எப்படியாவது வாறதென்று முடிவெடுத்து விட்டார் போல!

## ஜி. சீ. ஈ. (சாதாரணதர) பரீட்சை முடிவு

### மீளாய்வுக்கு 29க்கு முன் விண்ணப்பிக்க கோரிக்கை

கொழும்பு, ஏப். 8

கடந்த வாரம் வெளியான ஜி சீ ஈ. [சாதாரண] பரீட்சை முடிவுகளை மீளாய்வு செய்வதற்கு விண்ணப்பிக்க வேண்டிய இறுதித் திகதி எதிர்வரும் 29 ஆம் திகதி என பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

தேவையான கட்டணத்துடன் விண்ணப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது. (இ-3)

# வன்னியில் இன்று முதல் பண்பாட்டுப் பவனி

யாழ்ப்பாணம், ஏப். 8

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் இரண்டு வார காலத்துக்கு பண்பாட்டுப் பவனி நிகழ்வை நடாத்தவுள்ளது.

இன்று தொடக்கம் எதிர் வரும் 24 ஆம் திகதி வரை யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் கலந்துகொள்ளும் சமூக வடாட்ட அரங்குகள், விவாத அரங்குகள், கலைஞர் சந்திப்புக்கள், களப்பயிற்சிகள் என்பவற்றோடு 'பெய்க்கால்' நாடகமும் பண்பாட்டுப் பவனி நிகழ்வில் இடம் பெறும்:

கிராமிய நிகழ்வுகள், நாடகப் பட்டறைகள் என்பனவும் பண்பாட்டுப் பவனியில் அடங்கும்.

பருத்திநகர் சான்டோ துரைரத்தினம் குழுவினரின் வீர தீர விளையாட்டுக்களும் பவனியில் சிறப்பு நிகழ்ச்சிகளாக அடங்கும்.

8 ஆம், 9 ஆம் திகதிகளில் மன்னார் மாவட்டத்திலும் —

11 ஆம், 12 ஆம், 14 ஆம், 15 ஆம், 16 ஆம் திகதிகளில் கிளிநொச்சி மாவட்டத்திலும்—

18 ஆம், 19 ஆம், 20 ஆம்

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## சார்ஜா கிரிக்கெட் போட்டி:

# இலங்கை பங்குபற்றுமா என்பதில் இழுபறி நிலை?

கொழும்பு, ஏப். 8

இலங்கை கிரிக்கெட் அணியில் இருந்து திடீரென்று நீக்கப்பட்ட உதவிக்கப்டன் அரவிந்த டி. சில்வாவை மீண்டும் இந்த அணியில் சேர்த்துக் கொள்ளாவிட்டால், சார்ஜாவில் நடைபெறும் கிரிக்கெட் போட்டியில் தாம் கலந்து கொள்ளப்போவதில்லை என்று அணியின் கப்டன் அர்ஜுன ரணதுங்க அறிவித்துள்ளார்.

இது தொடர்பான கடிதத்தை அவர் நேற்று முன்தினம் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் நிர்வாக அலுவலரிடம் கையளித்துவிட்டு, அந்த இடத்தில் இருந்து விரைந்து சென்று விட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

அர்ஜுனா ரணதுங்க சார்ஜா போட்டிகளில் கலந்து கொள்ளாத பட்சத்தில், அவரைப் பின்பற்றி அணியின் ஏனைய மூத்த வீரர்களும் கலந்து கொள்ளமாட்டார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

கிரிக்கெட் அணியில் அங்கம் வகிக்கும் வீரர்கள் உடல்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் மீண்டும் பல் கட்டும் பணி

யாழ். ஆஸ்பத்திரியில் சுமார் பத்து வருடங்களின் பின் மீண்டும் பல் கட்டும் பணி ஆரம்பமாகியுள்ளது.

கடந்த வாரம் பல் கட்டும் பணி ஆரம்பமானதைத் தொடர்ந்து சுமார் பத்துப் பேர் பல் கட்டிச் சென்றுள்ளனர். மேலும் 120 பேர் பல் கட்டுவதற்காகப் பதிவு செய்துள்ளனர்.

பல் கட்டுவதற்கான பதிவுகள் புதன்கிழமைகளில் மட்டும் செய்யப்படும்.

கடந்த வருடமே இப்பணி ஆரம்பிக்கப்பட இருந்தது. இதற்கென தொழில்நுட்பவியலாளர் ஒருவரும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தார்.

எனினும் பல் கட்டுவதற்கான மூலப் பொருள்கள் அனுப்பப் படாததால் இந்த வேலைகள் தடைப்பட்டிருந்தன. (ஓ-15)

# சமாதானப் பேச்சுக்குச் சென்ற இரு நாட்டு ஜனாதிபதிகள் பலி!

## அவர்கள் பயணம் செய்த விமானம் மீது றொக்கெட் தாக்கு

மத்திய ஆபிரிக்காவில் உள்ள ருவாண்டா மற்றும் புருண்டி நாடுகளின் ஜனாதிபதிகள் அவர்கள் பயணம் செய்த விமானம் மீது நடத்தப்பட்ட ரொக்கெட் தாக்குதலின் போது கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.

அத்தாக்குதலின் போது ருவாண்டாவின் இராணுவத் தளபதியும் இரு அமைச்சர்களும் கொல்லப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இரு ஜனாதிபதிகளும் தான்சானியா தலைநகர் தாருஸ்ஸாமில் இருந்து பயணம் செய்த விமானம் ருவாண்டா தலைநகர் கிகாலியில் தரையிறங்கிக் கொண்டிருந்த போது அதன் மீது இனந்தெரியாதவர்கள் ரொக்கெட் தாக்குதலை நடத்தினார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இரு நாடுகளிலும் இடம்பெற்று வரும் இனமோதல்களை நிறுத்துவது தொடர்பாக தான்ஸானியாவில் நடந்த சமரச மாநாட்டில் இரு ஜனாதிபதிகளும் கலந்து கொண்டுவிட்டு ருவாண்டா திரும்பிக் கொண்டிருந்தனர்.

இதேவேளை — ருவாண்டா ஜனாதிபதி ஹபியாரிமானா கொல்லப்பட்டதை அடுத்து அந்த நாட்டுத் தலைநகர் கிகாலியில் வன்செயல்கள் வெடித்துள்ளன என்று அறிவிக்கப்படுகிறது.

உயிரிழந்த ஜனாதிபதியின் அரசியல் எதிரிகளான மூன்று அமைச்சர்களையும் —

அவர்களது குடும்பத்தினரையும் —

ஆயுதம் தரித்திராத ஐ. நா. கண்காணிப்பாளர்கள் மூவரையும் — ஜனாதிபதி மாளிகைக் காவலர்கள் கடத்திச் சென்று விட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையில் புறூண்டி நாட்டின் இடைக்கால ஜனாதிபதியாக தேசிய சட்டசபையின் சபாநாயகர் நியமிக்கப்பட்டார் என்றும் — அங்கு அமைதி நிலவுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

# மணலாறு காட்டுப்பகுதியில் விமானங்கள் குண்டு வீச்சு!

யாழ்ப்பாணம், ஏப். 8

முல்லைத்தீவு மணலாறு காட்டுப் பகுதியில் புக்காரா மற்றும் சியாமாசெட்டி ரக விமானங்களும், ஹெலிகளும் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தி உள்ளன.

மணலாறு கரையோர இராணுவ முகாம்களில் இருந்து ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

இத்தாக்குதல்களினால் ஏற்பட்ட விளைவுகள் குறித்து இதுவரை எதுவித செய்திகளும் வெளியாகவில்லை.

ஆனால் பெருமளவு மரங்கள் அழிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

முல்லை மாவட்டத்தில் 'ஜயபூமி' என்ற பெயரில் இராணுவ நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப் பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்திருந்தன.

இந்த இராணுவ நடவடிக்கையின் ஒரு பகுதியாகவே இத்தாக்குதல் நடந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## யாழ். விஜயத்தின் போது

# படையினரை விடுவிக்கவும் முஹம்மது முயற்சிப்பார்

கொழும்பு, ஏப். 8

வட பகுதியில் சிறை வைக்கப் பட்டுள்ள பாதுகாப்புப் படையினரை விடுவித்தல், மற்றும் சமாதானத்தை ஏற்படுத்தல் முதலான விஷயங்கள் குறித்து பேச்சு நடத்துவதற்காக மிக விரைவில் யாழ்ப்பாணம் செல்ல நான் எண்ணியுள்ளேன்.

சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முஹம்மது ஸங்காதிப நாளிதழுக்கு அளித்த பேட்டியில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த முதலாம் திகதி தாம் மேற்கொள்ளவிருந்த யாழ். விஜயம் ஒத்திவைக்கப்பட்ட செய்தி குறித்து யாழ்ப்பாணத்தில் போதிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டதை தாம் அறிந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-எ-6)

# ஓட்டோ, தொலைத்தொடர்பு சாதனம் பெற்றோரிடம் கோருகிறார் பணிப்பாளர்!

யாழ்ப்பாணம், ஏப் 8

இன்று எமது பிரதேசத்தில் போக்குவரத்து வசதிகளோ, தொலைத் தொடர்பு வசதிகளோ இல்லாமையால் திணைக்களம் திறம்படச்செயலாற்ற முடியாதுள்ளது பெற்றோர்கள் ஓர் "ஓட்டோ" வாகனத்தையும் தொலைத் தொடர்பு சாதனத்தையும் தந்துதவக் கூடியவர்களா யிருப்பின் எம்மால் விரைவாகவும் திறமையாகவும் செயற்பட முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

—இவ்வாறு யாழ்ப்பாணம் —வலயம் I கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி தெரிவித்துள்ளார்.

ஜி. சீ. ஈ. (சாதாரணதர) பரீட்சை முடிவுகள் தாமதமாக வெளியிடப்பட்டது குறித்து நேற்று முன்தினம் 'உதயன்' முன்பக்கத்தில் பிரசுரமான செய்தி குறித்து பணிப்பாளர் அனுப்பிய கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பரீட்சைப்பெறுபேறுகளைப் பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வருவதில் ஏற்பட்ட தாமதம் குறித்து மாணவர்களும் பெற்றோரும் அதிருப்தியடைந்துள்ளனரென ஒரு கருத்து நிலவுகின்றது.

யாழ்ப்பாணக் கல்வித் திணைக்களம் வலயம் 1, வலயம் 11 என்பவற்றிற்குத் தற்போது ஓர் ஓட்டோ வாகனமேயுள்ளது. இவ்வாகனம் ஒவ்வொரு திங்கட்கிழமையும் செவ்வாய்க்கிழமையும் மாதத்தில் முதற் சனிக்கிழமையும், மூன்றாம் சனிக்கிழமையும் வலயம் 11 கல்விப்பணிப்பாளரினால் உபயோகிக்கப்படுகின்றது 1994, ஆகஸ்ட் ஜி சீ ஈ (உ/த) பரீட்சை, ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சை-1994 என்பவற்றுக்கான விண்ணப்பங்களைப் பாடசாலைகளிலிருந்து சேகரித்துப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு முன்னுரிமை

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

றெக்சின் உறையுடன் Z.P. அமைத்த புதிய தமிழ் பைபிள்கள் சொற்ப பிரதிகள் விற்பனைக்குண்டு. சி. எல். எஸ். புத்தகசாலை, 570, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (7487)

7x4, 7x3, 4x5 அளவுடைய நீளமான றங்குகள் தேக்குத் திராந்திகள் உடன் விற்பனைக்குண்டு. கொங்கிறீற் சுதிகளும் உண்டு. தொடர்பு: திருமதி ப. கிருஷ்ணன், வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை (வட்டுக்கோட்டை சந்திக்கு அண்மையில்). (7189)

### விற்பனையாகிறது

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் வரிமுறை வர்த்தக நிறுவனங்கள் விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம் (சி/7473)

### வாழ்த்து மடல்கள்

புதுவருட வாழ்த்துமடல்கள் தொகையாகவும் சில்லறையாகவும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள: மதிமிகள், ஸ்ரீகாந் யாழ்ப்பாணம். (சி-7476)

### கோழிக்குஞ்சு விற்பனை

ஒரு நாள் புறொயிலர் கோழிக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. ஆஷா கோழிப் பண்ணை, முதலாம் கட்டை, பிரதான வீதி, பருத்தித்துறை. (30239)

### காவேரி சீயாக்காய்

பேன், சொடுகு, அழுக்கு அறவே இல்லாமல் செய்வதுடன் உங்களது கூந்தலை மிகவும் அழகுடன் வைத்திருப்பது காவேரி சீயாக்காய்ப் பவுடர். இதுவரையும் காவேரி சீயாக்காய்ப் பவுடரைப் பாவிக்காதவர்கள் ஒருமுறை வாங்கிப் பாவித்தால் அதன் உண்மையை நீங்களே உணர்வீர்கள். (30162)

### உடன் தேவை

யாழ். நகர சுற்றாடலில் [இரு மைல்களுக்குள்] சிறிய குடும்பத்திற்கு தனி வீடு அல்லது அனெக்ஸ் தேவை. தொடர்பு: விக்னா கல்வி நிலையம், 52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-7478)

### மணமகள் தேவை

கனடாவில் தொழில் புரிகின்ற மணமகனும், இந்து சமயத்தைச் சேர்ந்தவரும் 7இல் செவ்வாயுடைய (பாவங்கூடிய) ஜாதகத்தை உடைய நற்குணமுள்ள மணமகனுக்கு பெற்றோர் கௌரவமான, படித்த, அழகிய மணமகளைத் தேடுகின்றார்கள். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: P. செல்லப்பா, 21/1, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். (7055)

### DRESS MAKING

ஆடை தயாரித்தல், பூச் செய்தல், ஐசிங் ஆகிய வகுப்புக்கள் உடுவில் மகளிர் கல்லூரியில் நடைபெறுகின்றன. சனி, ஞாயிறு, செவ்வாய், வியாழன் பிற்பகல் 3 மணிக்கு அனுமதி பெற்றுக்கொள்ளலாம். (7058)

---

## MODERN EDUCATION CENTRE

KARAVEDDY POINT - PEDRO

**O/L (1994) துரித மீட்டல் வகுப்புக்கள்**

ஆரம்பம்: 09 - 04 - 1994

| | | |
|---|---|---|
| கணிதம் | — | திரு. ராமகிருஷ்ணன், திரு. சிவராஜா |
| தமிழ் | — | திரு. விசுவாசம் |
| விஞ்ஞானம் | — | திரு. மகேந்திரம் |
| சமூகக்கல்வி | — | திரு. சிவநாதன் |
| ஆங்கிலம் | — | திரு. போஜியா பிரான்சிஸ் |
| வர்த்தகம் | — | திரு. சிவலிங்கம், திரு. சனி |
| சமயம் | — | திருமதி மனோன்மணி |
| சித்திரம் | — | திரு. இளங்கோ |

[7195]

---

## MODERN EDUCATION CENTRE

POINT - PEDRO

**A/L 96 கணித - விஞ்ஞான வகுப்புக்கள்**

ஆரம்பம்: 09 - 04 - 1994 (சனி) 9-00 மணி

| | | |
|---|---|---|
| தூய கணிதம், பிரயோக கணிதம் | — | திரு. அருளானந்தம் |
| இரசாயனவியல் | — | திரு. செல்வா |
| பௌதிகவியல் | — | திரு. சோதிலிங்கம் |
| தாவரவியல் | — | திரு. குகதாசன் |
| விலங்கியல் | — | திரு. சசன் |

[7193]

---

## SCIENCE COLLEGE

**விஞ்ஞானக் கல்லூரி**

பெருமாள் கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

**96 A/L**

**கணித - உயிரியல் வகுப்புக்கள்**

இரசாயனவியல்
திரு. A. மகாதேவா
B. Sc. (Hons) Dip-in-Ed.

பௌதீகவியல்
திரு. ரவீந்திரநாதன் B Sc (Cey) Dip-in-Ed
திரு. சூரியநாதன் B. S (Hons) Dip-in Ed.

தூய/பிரயோக கணிதம்
திரு. குணசிங்கம்
B Sc (Hons) Dip-in-Ed

விலங்கியல்
திரு. ஈஸ்வரதாசன்
B. Sc. (Hons) Dip-in-Ed

தாவரவியல்
திரு. செல்வநேசன்

புதிய வகுப்புக்கள்
**09 - 04 - 1994 சனிக்கிழமை**
ஆரம்பமாகும்

அனுமதிகளை உடன் உறுதிப்படுத்தவும்

[சி-7710]

---

## BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

**கலை, வர்த்தகம்**

**A/L 96**

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | வரதராஜன் |
| அளவையியல் | — | எஸ். எஸ். மனோகரன் |
| வர்த்தகம் | — | பசில் |
| கணக்கியல் | — | சௌந்தி |
| தமிழ் | — | மீரா |
| இந்துநாகரிகம் | — | பாலா |
| புவியியல் | — | பிரபல ஆசிரியர் |
| கிறிஸ்தவம் | — | நிரஞ்சன் |
| இந்துசமயம் | — | தாஸ் |
| அரசியல் | — | பஞ்சாட்சரம் |
| நாடகமும் அரங்கியலும் | — | சிவா |

**ஆரம்பம்: 09 - 04 - 1994**

சனி காலை 9மணி

[சி-7706]

---

## ஜீன் கல்வி நிலையம்

*******

திருநெல்வேலி

**A/L 96 கலை வர்த்தகம்**

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. வரதராஜன் |
| அளவையியல் | — | திரு. S. S. மனோகரன் |
| வர்த்தகம் | — | திரு. பாலா |
| கணக்கியல் | — | திரு. சௌந்தி |
| இந்துநாகரிகம் | — | திரு. சிவமகாலிங்கம் |
| தமிழ் | — | திரு. பாலா |
| அரசியல் | — | திரு. கிருஷ்ணகுமார் |
| புவியியல் | — | பிரபல ஆசிரியர் |

**ஆரம்பம்: 09 - 04 - 1994**

சனி 11.00 மணி

(சி-7 807)

---

## PERSONAL NEW SCIENCE CENTRE

எழிலகம் முன்: யாழ்ப்பாணம்,

**A/L 96 கணித உயிரியல்**

வகுப்புகள்

| | | |
|---|---|---|
| தூய-பிரயோக கணிதம் | - | திரு. குணசிங்கம் B.Sc (Hons) Dip-in-Ed. |
| பௌதீகவியல் | — | திரு. ரவீந்திரநாதன் B Sc.(Cey) Dip-in-Ed. |
| இரசாயனவியல் | — | திரு. செல்வா B. Sc. (Hons) |
| விலங்கியல் | — | திரு. ஈஸ்வரதாசன் B Sc. (Hons), Dip in-Ed |
| தாவரவியல் | — | திரு. பாலா |

**ஆரம்பம்: 09 - 04 - 1994**

சனி

அனுமதிகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன

(சி/7709)

---

''தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகை செய்தல் வேண்டும்''

## யாழ்ப்பாணம் அண்ணாமலை இசைத் தமிழ் மன்றத்தின்

**36 ஆவது ஆண்டு**

# தமிழ் இசை விழா

இடம்: நல்லூர் பண்டாரக்குளம் மருதவளவு விநாயகர் ஆலய முன்றில்

காலம்: **01 - 04 - 1994** முதல் **15 - 04 - 1994** வரை

08 - 04 - 1994 வெள்ளிக்கிழமை

### எட்டாம் நாள் நிகழ்ச்சிகள்

மாலை 7-00 மணி

செல்வி ராஜஸ்ரீ பசுபதீஸ்வரசர்மா, மாணவிகள் அ இ. த. ம. மாணவிகள் — பாட்டு, வீணை

7-30 மணி

செல்வி நந்தினி இராமலிங்கம் — பாட்டு
திரு. எஸ். வெங்கடேஸ்வரசர்மா — வயலின்
திரு. சதா. வேல்மாறன் — மிருதங்கம்

8-15—9-30 மணி

திரு. கே. இராமநாதன் — பாட்டு
திரு. எஸ். சர்வேஸ்வரசர்மா — வயலின்
திரு. எஸ். துரைராசா — மிருதங்கம்
திரு. ஏ. செல்வரத்தினம் — கடம்

வாழ்த்துவோர்:

**ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்**

(சி/7656)

---

## NEW MASTER INSTITUTE

B M C LANE, JAFFNA

**96 - A/L**

**விஞ்ஞான, கணித வகுப்புகள்**

**ஆரம்பம்: 10 - 04 - 94**

| | | |
|---|---|---|
| PHY. | — | திரு. வர்ணம் |
| CHE. | — | திரு. தில்லை |
| BOT. | — | திரு. நேசன் |
| ZOO | — | திரு. கெங்காதரன் |
| MATHS | — | திரு. கிருஷ்ணா |

[illegible] அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.

(சி-7805)

---

## முக்கிய அறிவித்தல்

வட பிராந்திய வர்த்தக சங்கங்களின் சமாசம்

எதிர்வரும் சித்திரை புத்தாண்டு வருடப்பிறப்பை முன்னிட்டு வரும் **09 — 04 — 1994** சனிக்கிழமையும் **10 — 04 — 1994** ஞாயிற்றுக்கிழமையும் சகல வியாபார நிலையங்களும் முழுமையாக திறந்து வியாபாரம் செய்யலாம் என அன்புடன் அறியத்தருகிறோம்.

நன்றி.

— செயலாளர்.

[சி-7713]

---

## 'A' LEVEL CENTRE

1ஆம் ஒழுங்கை பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

**A/L 96**

**ஆரம்பம்: 16 - 04 - 1994**
SAT & SUN

| | | |
|---|---|---|
| இரசாயனவியல் | — | திரு. நாகரட்ணம் B Sc. |
| பௌதிகவியல் | — | திரு. ஜெயசீலன் B. Sc. |
| தூய பிரயோக கணிதம் | — | திரு. நித்தியானந்தன் B. Sc. |
| தாவரவியல் | — | திருமதி சுரேந்திரன் B Sc. |
| விலங்கியல் | — | திரு. ஞானேந்திரன் Dip Sc. |

பெயர்களை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

[சி-7801]

---

## யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி

சுன்னாகம்

**பல்கலைக்கழக அனுமதி**

**கல்வியாண்டு - 1993/94**

பின்வருவோர் தெரிவாகியுள்ளனர்:

1. செல்வன் கு. ஜெயகேசன் - பொறியியல்
2. செல்வன் த. குகதாஸ் - வர்த்தகம்
3. செல்வன் கு. தயாபரன் - கலை

— அதிபர்

[சி/2081]

---

## டொனால்ட் கணேஷகுமார் வெற்றிக் கிண்ணத்திற்கான

சென்றலைற்ஸ் வி. க. நடத்தும் மட்டுப்படுத்தப்பட்ட (50) ஓவர்களைக் கொண்ட

**கிரிக்கெட் போட்டி - 1994**

விண்ணப்ப முடிவு திகதி 9 - 4 - 1994
அணி ஒழுங்கு தெரிவு 11-04-94 மாலை 4 30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில். பிரவேசக் கட்டணம் ரூபா 300/-

சென்றலைற்ஸ் விளையாட்டுக் கழகம்
233, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/7716)

---

## பரிசளிப்பு விழா

1993 ஆம் ஆண்டில் நடைபெற்ற தமிழீழப் பொதுக்கல்வித் தேர்வின் பரிசளிப்பு விழா யாழ் இந்துக் கல்லூரியில் இன்று [08 4-94] வெள்ளிக்கிழமை பி. ப. 2 மணிக்கு நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர், தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை உறுப்பினர் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

மேற்படி தேர்வு சிறப்புற நடந்தேறப் பலவகையாலும் ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் பேரவையின் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

[30296] தமிழீழக் கல்விமேம்பாட்டுப் பேரவை

---

## எமது புதிய வெளியீடுகள்

* **இன்ஸ்பெக்ரர் விஜய்**
ராம்கி, நிரோஷா

* **என் ராஜாங்கம்**
ஆனந்தராஜ், வினோதினி, ஜெயசங்கர்

* **படிக்காத வாத்தியார்**
சந்திரகாந், பல்லவி, சந்திரசேகர், ராதாரவி, செந்தில்

மேலும் 3 படங்கள் தணிக்கையின்பின் வெளியாகும்.

**வீடியோ ஓடியோ போட்டோஸ்ரட்** தேவைகளுக்கு

## மாருதி வீடியோ விஷன்

பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.

குறிப்பு:- புதிய படங்களுக்கு போஸ்டர்கள் உண்டு.

(சி/7715)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலக வளர்ச்சிக்கான

**நிதியுதவி நிகழ்ச்சிகள் பிற்போடப்பட்டுள்ளன**

பருத்திநகர் பெருந்திறள்ச்சான்றோன் எம். துரைரத்தினமும் அவர்களின் மாணவர்களும் வழங்கும் வீரதீரச் செயல்கள்

குறிப்பு:
யா/வட்டு-இந்துக்கல்லூரியில் 09-04.1994 சனிக்கிழமை நடைபெறவிருந்த இந் நிகழ்ச்சி தவிர்க்க முடியாத காரணத்தால் 14-05-1994 சனிக்கிழமை நடைபெறும்.

விளம்பர அன்பளிப்பு:

யாழ். நகரில் புதுவருடத்தை முன்னிட்டு பாட்டா, டி. எஸ். ஐ. பாதணிகள் மலிவு விற்பனை

**சிற்றி சூ பலஸ்**

140, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
(CITY SHOE PALACE)

(30276)



**நிரு ரியூசன் சென்ரர்**

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்,

**O/L DAY CLASSES**

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — | இரா. செல்வவடிவேல் |
| கணிதம் | — | திரு. மகேந்திரன் |
| தமிழ் / சமயம் | — | திரு. பண்டிதர் |
| சமூகக்கல்வியும் வரலாறும் | — | திரு. வேலா |
| ஆங்கிலம் | — | திரு. தர்மலிங்கம் |
| வர்த்தகம் | — | திரு. நவம் |
| சித்திரம் | — | திரு. ரமேஸ் |

**ஆரம்பம்: 10-04-1994**
காலை 8 மணி

குறிப்பு:
திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய 6 நாட்களும் வகுப்புகள் நடைபெறும். முழுப்பாடத்திட்டத்துடன், கடந்த கால வினா-விடையும் நடைபெறும்.

— நிர்வாகி,

[சி-7687]



சுன்னாகம் ப. நோ. கூ. சங்கம்
(வரைவுள்ளது)
சுன்னாகம்

**பதவி வெற்றிடம்**

**விற்பனையாளர் (குறி. இலக்கம் 308.15)**

மேற்படி பதவிக்கு யாழ். மாவட்டத்தில் வசிக்கும் தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சம்பளத்திட்டம்:
ரூபா 685 — 860
10 10 — 15 5
இத்துடன் சங்கத்தால் வழங்கப்படும் சகல அலவன்ஸ்களும் வழங்கப்படும்.

தகைமை:
அ) கூட்டுறவுப் பணியாளர் கனிஷ்ட தராதரப்பத்திரம் அல்லது
ஆ) எட்டாம் வகுப்பிலான சித்தியும் விற்பனைத் தொழிலில் மூன்று வருடத்திற்கு குறையாத அனுபவமும்.

வயது:
விண்ணப்ப முடிவு திகதியன்று 18 வயதிற்குக் குறையாமலும் 40 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி: 25-04-1994

விண்ணப்பப் படிவத்தையும் ஏனைய மேலதிக விவரங்களையும் ரூபா 10/- செலுத்தி சங்க வேலை நாட்களில் தலைமைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

— பொதுமுகாமையாளர்.

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்,
சுன்னாகம்.
04-04-1994.

(சி-2080)



சுன்னாகம்
யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி
முன்னாள் ஆசிரியர்

**பண்டிதர் கணபதிப்பிள்ளை சிவசம்பு**

அவர்களின் மறைவு குறித்து ஆறாத்துயரில் ஆழ்ந்திருக்கும் அவரின் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும்

ஸ்கந்தா அன்னையின் ஆழ்ந்த அனுதாபங்கள்

ஆசிரியர் கழகம்,
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

கந்தரோடை,
சுன்னாகம்.

[30275]


# மாகாண கல்வி - உள்துறை அமைச்சுகளிடையேபிரச்சினை

## அதனால்தான் சிற்றூழியர் நியமனத்தில் தாமதமாம்

யாழ்ப்பாணம், ஏப். 8

வடக்கு - கிழக்கு மாகாண சேவையில் — கல்வித் திணைக்களத்தில் — உள்ள சிற்றூழியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையின் அடிப்படையில் எவருக்கும் நியமனம் வழங்கப்படவில்லை.

இந்நியமனங்களை வழங்குவதற்கான அதிகாரம் மாகாணக் கல்வி அமைச்சுக்கு உரியதா அல்லது மாகாண உள்துறை அமைச்சுக்குரியதா என்ற பிரச்சினை காரணமாகவே இவ்விடயம்பற்றி எவ்வித முடிவும் செய்யப்படவில்லை.

யாழ்ப்பாண கல்வி வலயம் - I இன் கல்விப் பணிப்பாளர் செல்வி தி. பெரியதம்பி இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை 1992-02-19 ஆம் திகதியிடப்பட்ட 8/92 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிரந்தர நியமனம் வழங்கப்படுவதற்காக 77 அமைய நிவாரணப் பணியாளர்களின் பெயர்கள் மாகாணக் கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

இவர்களில் 42 சிற்றூழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுவிட்டது. ஏனையோருக்கும் காலகதியில் நிரந்தர நியமனம் வழங்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது — என்றும் அவர் தெரிவித்துள்ளார். (உ)

## யாழ். மாணவரின் கல்வி மத்திம நிலையிலேயே!

கடந்த செவ்வாயன்று வெளியான ஜி. சி. ஈ (சாதாரண) பரீட்சை முடிவுகள் யாழ். மாவட்டத்தின் கல்வி நிலை மத்திம நிலையில் இருப்பதையே காட்டுகின்றன.

யாழ். மாவட்டத்தில் உள்ள கல்விமான்கள் சிலர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டனர்.

கடந்த வருட முடிவிலும் பார்க்க இம்முறை பெறுபேறுகள் சிறாக இருந்தாலும், ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடும்போது சிறந்த பெறுபேறுகளாக அவை அமையவில்லை என்றும் —

தமிழ் மாணவர்கள் எட்டுப் பாடத்திலும் அதிசிறந்த புள்ளி (டி) எடுப்பதற்கு எட்டாவது பாடமான அழகியற் கலை, கவின்கலை பாடங்கள் தடையாக இருந்துள்ளதாகவும் — கல்விமான்கள் சுட்டிக் காட்டினர்.

சித்திரம் போன்ற அழகியல் கலைப் பாடங்களை வடபகுதியில் போதிப்பதில் சிக்கல் இருப்பதாக ஆசிரியர் ஒருவர் சுட்டிக் காட்டினார்

சித்திர பாடத்திட்டம் பெரும்பாலும் பௌத்த நாகரிகத்தை ஒட்டியதாக அமைக்கப்பட்டிருப்பதாகவும் —

அது பற்றிய முழுவிவரமும் வடபகுதி ஆசிரியர்களுக்கே சரியாகத் தெரியாது என்றும் அவர் சொன்னார். (உ-3)

## ஐ.தே.கவில் சேரும் நோக்கம் கிடையாது

### பிரேமச்சந்திரா அறிவிப்பு

கொழும்பு, ஏப். 8

ஐக்கிய தேசியக் கட்சியில் சேரும் எண்ணம் தமக்கு இல்லை என்று வடமேல் மாகாண முதலமைச்சர் ஜி. எம். பிரேமச்சந்திரா தெரிவித்திருக்கிறார்.

வடமேல் மாகாணசபையின் நிர்வாகம் விரைவில் ஐக்கிய தேசியக் கட்சியின் கைக்கு மாறுமா? என்ற கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே, திரு. பிரேமச்சந்திரா மேல்கண்டவாறு லங்காதீப பத்திரிகைக்கு தெரிவித்தார். [இ-எ-6]

## கிழக்கு தேர்தல் மோசடி; ரகசிய பொலீஸ் விசாரணை

கொழும்பு, ஏப். 8

கிழக்கு மாகாண உள்ளூராட்சி தேர்தலின் போது காத்தான்குடி, ஏறாவூர் வாக்களிப்பு நிலையங்களில் நடந்ததாகக் கூறப்படும் மோசடிகள் குறித்து இரகசியப் பொலீஸ் கோஷ்டி நேரடியாக விசாரணை நடத்தியது.

இந்த மோசடியில் சம்பந்தப்பட்ட பொலீஸார் மீது நடவடிக்கை எடுக்குமாறு தேர்தல் ஆணையாளர் பொலீஸ்மா அதிபருக்கு அறிக்கை சமர்ப்பித்திருந்தார்.

இது குறித்து நேரடியாக விசாரணை நடத்த மட்டக்களப்புக்கு வந்த இரகசியப் பொலீஸ் அதிகாரிகள் அங்கு விசாரணைகள் நடத்தியதோடு வாக்களிப்பு நிலையங்களையும் பார்வையிட்டனர்.

இதேவேளை —

தேர்தல் திணைக்கள அதிகாரிகளும் மீண்டும் அங்கு சென்று விசாரணைகளை நடத்தியது. (த-3)

## பாப்பரசர் வரும்போது இலங்கை ஆயர் ஒருவரை கர்தினாலாக நியமிப்பார்

கொழும்பு, ஏப் 8

பரிசுத்த பாப்பரசர் அடுத்த ஆண்டு ஜனவரியில் இலங்கை வரும்போது, இலங்கையில் உள்ள கத்தோலிக்க ஆயர் ஒருவரை கர்தினால் ஆக நியமனம் செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கைக் கத்தோலிக்க மதகுரு ஒருவர் கர்தினால் ஆக நியமிக்கப்படவிருப்பது இது இரண்டாவது தடவையாகும் என்று தெரிவிக்கப்படுகிறது.

1970களில் அப்போது இருந்த பாப்பரசர் இலங்கை வந்தபோது காலஞ்சென்ற பேராயர் தோமஸ் கூரேயை கர்தினால் ஆக நியமித்தார்.

இம்முறை புதிய கர்தினால் பதவிக்கு கொழும்பு பேராயர் அதி வண. டாக்டர் நிக்கொலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ, நாட்டில் உள்ள அதிசிரேஷ்ட ஆயரான சிலாபம் ஆயர் அதி வண. டாக்டர் பிராங்க் மார்க்கஸ் பெர்னாண்டோ, கொழும்பு துணை ஆயர் அதி வண. டாக்டர் மல்கம் ரஞ்சித் ஆகியோரின் பெயர்கள் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளன என்று திருச்சபை வட்டாரங்களை மேற்கோள்காட்டி, சண்டே ஐலண்ட் தகவல் வெளியிட்டிருக்கிறது. (ஒ-எ)


**MODERN EDUCATION CENTRE**
KARAVEDDY - POINT PEDRO.

**A/L 96**
கலை, வர்த்தக வகுப்புகள்
ஆரம்பம்: 09-04-1994
(சனி) 9-00 மணி

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. லோகசிங்கம் |
| அளவையியல் | — | திரு. விக்கி |
| கணக்கியல் | — | திரு. பவான் |
| வர்த்தகம் | — | திரு. சோதிலிங்கம் |
| தமிழ் | — | திரு. நடா |
| இந்துநாகரிகம் | — | திரு. [illegible] |
| இந்துசமயம் | — | திரு. சோமசுந்தரக்குருக்கள் |

[illegible]


## புலிகளின் குரல் வானொலியில்

08 04 1994
வெள்ளி இரவு

★ 8-01 — அன்னை பூபதி நினைவாக சிறப்பு நிகழ்ச்சி — "அணையாத தீபம் அன்னை பூபதி"
8-10 — கலைமஞ்சரி — நிகழ்ச்சியில் முதலில் சிறுகதை "அம்மா" அடுத்து கவிதை — "நண்பனே"
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — அரசியல் அரங்கம் — "தென்னாபிரிக்காவில் திடீர் திருப்பங்கள்"
8-50 — வாத்திய கானங்கள்

09-04-1994
சனி காலை

★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — அன்னை பூபதி நினைவாக சிறப்பு நிகழ்ச்சி — "போர்க்களத்துப் பூவான அன்னை பூபதி"
★ 7-25 — நீங்கள் கேட்டவை
★ 7-45 — செய்திகள்
★ 7-50 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-55 — தாயகப் பாடல்

## தமிழிசை விழாவில் இன்று

யாழ்ப்பாணம் அண்ணாமலை இசைத் தமிழ் மன்றத்தின் தமிழிசை விழாவில் இன்று வெள்ளிக்கிழமை செல்வி நந்தினி இராமலிங்கம் திரு. கே. இராமநாதன் ஆகியோரின் பாட்டு இடம் பெறும். (க-111)

## அன்னை பூபதி நினைவு சிரமதானம்

அன்னை பூபதி நினைவாக இன்று வெள்ளிக்கிழமை மிருசுவில் யாசிர் சனசமூக நிலையம் துப்புரவு செய்யப்படும். (க)

## நூல் வெளியீடு

திரு சி. மே. மாட்டின் எழுதிய "உதைபந்தாட்டப் பிரச்சினைகள்" எனும் நூலின் வெளியீடு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும். யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக்குழு ஒழுங்கு செய்துள்ள இவ் வெளியீட்டு விழாவுக்கு குழுவின் செயலாளர் திரு சி. முருகநேசன் தலைமை வகிப்பார். (க)

## எள்ளு செய்கைக்கு கடனுதவி

கிளிநொச்சிக் கோட்டத்தைச் சேர்ந்த 60 பயனாளிகளுக்கு தமிழீழ பொருண்மிய நிறுவனம் எள்ளுச் செய்கைக்காக கடனுதவிகளை வழங்கி உள்ளது.

எள்ளுச் செய்கையில் தன்னிறைவு காணும் நோக்குடன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வடதமிழீழம் முழுவதும் எள்ளுச் செய்கை ஊக்குவிப்புக்கான பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இத்திட்டத்தின் கீழேயே கிளிநொச்சிக் கோட்டம் கண்டாவளை பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு கடனுதவி வழங்கப்பட்டது. (த)

## கால்நடை பரிசோதனை

இறைச்சிக்காக வெட்டப்படும் கால் நடைகளை பரிசோதிக்கும் திட்டம் முல்லைத்தீவு மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இவ்வகையில் கடந்த மாசி மாதத்தில் மட்டும் 335 கால் நடைகள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டன. இத்திட்டத்தினால் நோய்வாய்ப்பட்ட, சினைப்பட்ட வயது குறைந்த நல்லினக் கால்நடைகள் இறைச்சிக்காக வெட்டப்படுவது தடுக்கப்படுவதுடன் நுகர்வாளர்கள் தரமான இறைச்சியையும் பெற்றுக் கொள்ளக் கூடியதாயிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.


யாழ்ப்பாணக் கல்வி நிலையம்
**THE JAFFNA EDUCATION CENTRE**
(சாந்தி சினிமா முன்பாக மேல்மாடியில்)

**வகு. 4 - 10, O/L, A/L**
**SPOKEN ENGLISH**
Short - Hand Typing இரு மொழிகள் மூலமும் நடைபெறுகின்றன,

புதிய பிரிவுகள் ஆரம்பம்,
09-04-1994
- நிர்வாகி,

(7192)



துன்னாலை, ஆயில் நின்றொல்லை
**விநாயகர் ஆலய**
**8ஆம் திருவிழா**
08 - 04 - 1994 வெள்ளிக்கிழமை

★ விசேட நிகழ்ச்சிகள்

சிறப்புரை, பிற்பகல் 7-30 மணி
"இறை வணக்கம்" பற்றி
பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ருபானந்தா

பட்டி மண்டபம், இரவு 8-30 மணி
"செஞ்சோற்றுக் கடன் தீர்ப்பதில் முன்னின்றவன்"

| கும்பகர்ணனே | கர்ணனே |
|---|---|
| இரா. செல்வவடிவேல் | க. நாகேஸ்வரன் எம். ஏ. |
| ச. மணிமாறன் | த. சிவசங்கர் |
| க. குமாரதாசன் | ஸ்ரீ பிரசாந்தன் |

நடுவர்: இ. ஜெயராஜ்
(கம்பன் கழகம்)

— திருவிழா உபயகாரர்.

[30283]



வாரிவளவு நல்லியக்கசபை-காரைநகர்

**காரைநகர் மாணவர்களுக்கான**
**கல்வி ஊக்குவிப்பு**

க. பொ. த. (உயர்தரம்) 1992ஆம் 1993ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஆவணி பரீட்சைகளில் தோற்றி, 260 புள்ளிகளுக்குமேல் பெற்று, பல்கலைக் கழகத்திற்கு அனுமதி பெறத் தகுதியுடைய மாணவர்கள் 1994 - 04 - 10 ஞாயிறு காலை 10-00மணிக்கு யா/நாவலர் ம. வித்தியாலயத்துக்கு சமூகம்தரும்படி வேண்டப்படுகின்றீர்கள்,

★ இடம்பெயரும் முன்னர் பெற்றோர்கள் காரைநகரில் நிரந்தர குடியிருப்பாளராக இருந்திருத்தல் வேண்டும்

★ இவர்களைப் பாராட்டி பரிசில் வழங்கும் நிகழ்வு 1994-04-17 ஞாயிறு காலை 11-00 மணியளவில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறும்,

-செயலர்.

148/10, புகையிரத நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
1994-04-07

(30279)



**ஓராண்டு நினைவஞ்சலி**



சின்னவி அப்புக்குட்டி

மலர்வு: 15 - 05 - 1924
உதிர்வு: 20 - 03 - 1993
திதி: 08 - 04 - 1994

ஆண்டொன்று ஏகிடினும் ஆறிடுமோ எம்மனத்துயரம்
உயிரது உள்ளவரை உள்ளத்திலாது உம்நினைவு
ஐயா உமை எம் நெஞ்சத்திருத்தி ஆத்ம சாந்திக்காய்
என்றும் இறைவனைப் பிரார்த்திக்கும்
- குடும்பத்தினர்.

"சரஸ்வதி இல்லம்"
காளி கோயிலடி
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

(சி-7696)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புத்தகங்கள் சஞ்சிகைகள் விற்பனையாளருக்கு

யாழ்ப்பாணம், ஏப் 8

புத்தகங்கள் சஞ்சிகைகள் விற்பனையாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்களுடனான கலந்துரையாடல் ஒன்று நாளை சனிகாலை 10 மணிக்கு யாழ். மாவட்ட அரசியல் துறை பணிமனையில் நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது. (த)

## "வளம்" சஞ்சிகை

யாழ். மாவட்ட வணிகவள நிலையத்தால் வெளியிடப்படும் "வளம்" வணிக மாணவர் சஞ்சிகையின் ஜனவரி-மார்ச் 94 இதழ் வெளிவந்துள்ளது.

கணக்கியல், வர்த்தகம், பொருளியல் முதலிய துறைகள் சார்ந்த கட்டுரைகள் இச் சஞ்சிகையில் வெளியிடப்பட்டுள்ளன. (௧-152)



## குவைத்தில் வேலை வாய்ப்பு

அமெரிக்க நிறுவனத்தில் வேலையாட்கள் தேவை

சம்பளம்

| | | | |
|---|---|---|---|
| சாரதிகள் | 90 KD | தச்சுத் தொழிலாளர் | 90 KD |
| மேசன்மார் | 90 KD | (F) பிற்றர் | 90 KD |
| கூலியாட்கள் | 60 KD | | |

சிங்கப்பூரில் வீட்டுப் பணிப் பெண்கள்

வயதெல்லை 18 — 40 வரை

சம்பளம் 200 சிங்கப்பூர் டொலர்

முற்பணம் அறவிடப்பட மாட்டாது

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
25/2, மணிக்கூட்டு வீதி,
(B M. C ஒழுங்கை),
யாழ்ப்பாணம்.

காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை

தொழில் அனுமதி பத்திர இல. 929

[7188]

## விசேட மலிவு விற்பனை

நீளக்காற் சட்டை ரவுசர்

அளவு: 28, 30, 32, 34

விலை 200/-

(சொற்ப கையிருப்பே உண்டு)

## லிங்கம்ஸ் சில்க் கவுஸ்

நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

[7185]

## BITSMANS

கல்வி நிறுவனம், மானிப்பாய்

SPOKEN ENGLISH WITH GRAMMAR

By

M. A. ஹரி

B A. Dip- in- Eng.

ஆரம்பம்: 09 - 04 - 1994

Sat: 4 00 p.m

(சி-7488)

உ

## அகில இலங்கைக் கம்பன் கழகம்

வழங்கும்

# மகரயாழ் விருது - 1994

எமது கழகத்தால் ஆண்டு தோறும் வழங்கப்படும்

"மகரயாழ் விருது"

இவ்வாண்டு நடுப்பகுதியில் நடைபெறவுள்ள கம்பன் விழாவில் வழங்கப்படவுள்ளது

இவ் விருதுக்குரியவரைத் தேர்ந்தெடுப்பதில் வழமை போல மக்கள் கருத்து அறியப்படவுள்ளது.

இவ் விருதுக்குத் தெரிவு செய்யப்படுபவருக்கு ரூபா இருபத்தையாயிரம் (25,000/=) கொண்ட பணமுடிச்சும், தங்கப் பதக்கமும், வெள்ளியிலான மகரயாழ் விருதும்

**முதல் நாள் கம்பன் விழாவில் வழங்கப்படும்**

தாம் சார்ந்த துறையினூடு தியாக உணர்ச்சியோடும், இனப்பற்றோடும், மனிதாபிமானத்தோடும் இம் மண்ணுக்காகத் தொண்டாற்றி, எமது இளைய தலைமுறைக்கு முன்னுதாரணமாக வாழ்ந்து கொண்டிருக்கும் ஒருவரையே இவ் விருதுக்காகத் தேர்ந்தெடுப்பதென எமது கழகம் முடிவு செய்துள்ளது.

இத்தகைய சான்றோரின் பெயர், விவரங்களைப் பொதுமக்களும், சமூக நிறுவனங்களும் சிபார்சு செய்து கீழ்க்கண்ட எமது முகவரிக்கு எதிர்வரும் 1994—04—30க்கு முன்னர் தபால் மூலம் அனுப்பி வைக்குமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

சிபார்சுகள் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேற்புறத்தில் மகரயாழ் விருதுக்கான சிபார்சு — 1994 எனக் குறிப்பிடவும்

★ விருது பற்றிய இறுதியான முடிவு கழக அறிஞர் குழுவினால் தீர்மானிக்கப்படும்

நன்றி;

கம்பன் புகழ்பாடிக் கன்னித்தமிழ் வளர்ப்போம்

தி, திருநந்தகுமார், தலைவர்.

க. குமாரதாசன், செயலர்.

அகில இலங்கைக் கம்பன் கழகம்
'கம்பன் கோட்டம்',
300, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

(சி-7712)

## நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்,

# A/L 1996

## கலை, வர்த்தகம்

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. உதயன் |
| கணக்கியல் | — | திரு. ஸ்ரீ |
| வர்த்தகம் | — | திரு. தேவா |
| அளவையியல் | — | திரு. எஸ். எஸ். மனோகரன் |
| இந்துநாகரிகம் / இந்துசமயம் | — | திரு. சோதி |
| தமிழ் | — | திரு. குழந்தை |
| புவியியல் | — | திரு. வேலா |
| நாடகமும், அரங்கும் | — | திரு. சத்தியா |

ஆரம்பம்: 09-04-1994

ஞாயிறு

குறிப்பு:
குறிப்பிட்ட 200 மாணவர்களுக்கே அனுமதி வழங்கப்படும் என்பதால் அனுமதிகளை உடன் உறுதிப்படுத்தவும்.

— நிர்வாகி.

[சி-7690]

## G. C. E. A/L - 96

கலை, வர்த்தக பிரிவுகள்

ஆரம்பம்:- 09-04-94

சனி காலை 8மணி

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | மகேந்திரன் |
| கணக்கியல் | — | SAM |
| வர்த்தகம் | — | தேவா |
| அளவையியல் | — | சோதி |
| இந்து நாகரிகம் | — | அருள்நங்கை |
| தமிழ் | — | குழந்தை |
| அரசியல் | — | கியூபேட் |
| புவியியல் | — | குணராசா |
| இந்துசமயம் | — | அருள்நங்கை, இரிதரன் |
| வரலாறு | — | ஸ்ரீதரன் |
| கிறீஸ்தவ சமயம் | — | அருட்சகோதரர் |

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(சி-7700)

## கலை வர்த்தகக் கல்லூரி

C.C.A.

(வெலிங்டன் சந்திக்கு அருகில்)

யாழ்ப்பாணம்.

கலை வர்த்தக வகுப்புக்கள்

# G.C.E.(A/L)96

ஆரம்பம்: 09 - 04 - 1994

காலை 8 மணி

சனி, ஞாயிறு வகுப்புகள்

ஆசிரியர் குழு

| | |
|---|---|
| பொருளியல் | திரு. உதயன் |
| கணக்கியல் | திரு. ஸ்ரீ |
| வர்த்தகம் | திரு. இரட்ணம் |
| அளவையியல் | திரு. சயந்தன் |
| இந்துநாகரிகம் / இந்து சமயம் | திரு. ஜோதீஸ்வரன் |
| புவியியல் | திரு வேலா |
| தமிழ் | திரு. தங்கராஜா |
| அரசியல் | திரு. பஞ்சு |
| கிறீஸ்தவ நாகரிகம் | திரு. நோபேட் |

குறிப்புக்கள்.

1. மாணவர் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டுள்ளதால் முற்கூட்டியே பெயர்களை பதிவு செய்து கொள்ளவும்.
2. மாதாந்த பரீட்சை மூலம் மாணவர் திறமை மதிப்பீடு செய்து வழிநடத்தப்படும்.
3. நேர அட்டவணைகளை காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

நிர்வாகி

(சி-7499)



## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 31 — 08 — 1922

மறைவு: 09 — 03 — 1994

### திருமதி அருளம்பலம் இராசம்மா

திதி: 08-04-1994

அன்புக்கோர் எல்லையில்லா அம்மாவே!
கதை பல கூறி கருத்துடன் வளர்த்தீர்
சீருடன் எம்மை வாழவும் வைத்தீர்
இன்று கடமை முடிந்ததென கடுகிப் போனீரோ!

எங்கள் இதய தெய்வத்தின் ஆத்மா ஈசனடியில் இன்புற்று வாழ பிரார்த்திக்கும்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பண்ணாகம், சுழிபுரம்.

(30248)



## விக்னா கல்வி நிறுவனம்

இல: 52. ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவமான ஒரே நிறுவனம்)

96 A/L கலை வர்த்தகம்

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு

| | | |
|---|---|---|
| பொருளியல் — திரு. க. கலாகரன் | வர்த்தகம் — திரு தேவா | கணக்கியல் — திரு. SK பிரபாகரன் |
| அளவையியல் — திரு. விக்கி | தமிழ் — திரு. குழந்தை | இந்து நாகரிகம், இந்து சமயம் — திரு. சாரை சுந்தரம்பிள்ளை |
| புவியியல் — திரு குணராசா | அரசியல் — திரு சீலன் | வரலாறு — திரு சிறீதரன் |

சனி, ஞாயிறு வகுப்புகள் (வார இறுதி)
ஆரம்பம்: 09-04-1994
காலை 8 மணி

மாலை நேர வகுப்புகள் (கிழமை நாட்களில்)
ஆரம்பம்: 11-04-1994
மாலை 4 மணி

அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

(சி-7492)

## 96 A/L

# கணித - விஞ்ஞான வகுப்புக்கள்

### NEW SCIENCE HALL

கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்

ஆசிரியர் குழு

| | |
|---|---|
| இரசாயனவியல் | — சிவசுப்பிரமணியம் B. Sc. (Hons) |
| பௌதீகவியல் | — S. சோதிலிங்கம் B. Sc (Special) |
| தாவரவியல் | — V. S குணசீலன் B. Sc. (Special) |
| விலங்கியல் | — தம்பிராஜா B. Sc. (Hons) Dip in-Ed. |
| தூய/பிரயோக கணிதம் | — குணசிங்கம் B. Sc. Dip-in-Ed. |

### NEW SCIENCE ACADEMY

எழிலகம் முன்பாக, யாழ்ப்பாணம்.

ஆசிரியர் குழு

| | |
|---|---|
| இரசாயனவியல் | — A. மகாதேவா B. Sc. |
| பௌதீகவியல் | — S J. கணேசன் B. S. (Eng.) |
| தாவரவியல் | — V. S. குணசீலன் B. Sc. (Special) |
| விலங்கியல் | — சண்முகநாதன் B. Sc. (Hons) |
| தூய/பிரயோக கணிதம் | — P. வெக்டர் வேலாயுதம் B. Sc. |

புதிய வகுப்புக்கள் 09 - 04 - 1994 (சனி) முதல் ஆரம்பமாகவுள்ளன

விண்ணப்பங்கள் யாவும் 08 - 04 - 1994 (வெள்ளி) வரை மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்

[சி-7699]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## தேர்தலுக்கான சீனிக் குளிகை!

காலஞ்சென்ற ஜனாதிபதி ரணசிங்கா பிரேமதாசாவின் சில பிரதான கொள்கைகளை மீண்டும் கைக்கொள்வதற்கு விஜேதுங்கா தலைமையிலான அரசாங்கம் உத்தேசித்திருப்பதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

பிரேமதாசாவின் மக்கள் நலன் நாடிய முக்கிய கொள்கைகளை மீண்டும் செயற்படுத்துவது குறித்து, எதிர்வரும் மேதினத்தில் மக்களுக்கு அறிவிக்க அமைச்சர்கள் தீர்மானித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வருடத்தில் நடைபெற உள்ள ஜனாதிபதி தேர்தலிலும், நாடாளுமன்றத் தேர்தலிலும் ஐக்கிய தேசியக் கட்சி வெல்ல முடியுமா என்ற மிகவும் பாரதமான ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. கடந்த பதினேழு வருடங்களாக ஒரே தொடர்ச்சியாக ஆட்சிக் கட்டிலில் உள்ள ஐக்கிய தேசிய கட்சி மக்கள் ஆதரவை இழந்த பலவீனப்பட்டு நிற்கிறது. தென் மாகாண சபைத் தேர்தல் அதனை ஓரளவு அளந்து காட்டியிருக்கிறது. தென்னிலங்கை அரசியலில் மக்கள் அலை மாறியிருக்கிறது என்பது உண்மை!

ஜனாதிபதி விஜேதுங்கா உட்பட ஆளுங்கட்சியினர் மக்கள் ஆதரவு என்ற மேடையில் தாம் வீழ்த்தப்பட்டதை உணர்கிறார்கள். மீண்டும் எழுவதற்கு, தமக்குப் பலம் சேர்ப்பதற்கு, என்னென்ன செய்யலாம் என்பதனை, தமது தவறுகளைத் திருத்துவதற்கு, பல திட்டங்கள், உத்திகளை வகுத்து வருகின்றனர். அவற்றில் ஒன்றுதான் பிரேமதாசா நடைமுறைப்படுத்திய மக்கள் நலன்நாடிய கொள்கைகளை மீண்டும் செயற்படுத்தும் உத்தேசம்.

பிரேமதாசா ஜனாதிபதியாக இருந்த காலத்தில் அவரின் பெரும் விசுவாசியாகக் காட்டிக்கொண்டவர் டி. பி விஜேதுங்கா. ஆனால் பதவிக்கு வந்ததும் தன்னை மாற்றிக்கொண்டார். ஆரம்பத்தில் ஜே. ஆரின் இசைக்கு பாடியவர், சில மாதங்களில் தமது சொந்த முத்திரையைக் குத்த நினைத்து, பலரிடம் ஆலோசனைகள் கேட்டு, "காழ்ப்புணர்ச்சி"க் கொள்கைகளை கைக்கொள்ளத் தொடங்கினார். பிரேமதாசாவுக்கு இருந்த எதிர்ப்பலையைப் பயன்படுத்தி அப்படி ஒருவர் வாழ்ந்தார் என்பதனை மக்கள் மறந்து போக வேண்டும் என்று நினைத்தோ என்னவோ, அவரது மக்கள் நலன்நாடிய பல கொள்கைகளை டி. பி. முற்றாக ஒதுக்கித் தள்ளினார்.

ஆளுங்கட்சிக்கு மக்கள் ஆதரவு குறைந்தமைக்கு விஜேதுங்காவின் இந்தப் போக்கே பெருமளவில் காரணம் என்று பிரேமதாசா ஆதரவாளர்கள் கருதுகிறார்கள். அதனாலேயே அவரது கொள்கைகளை மீண்டும் செயற்படுத்த வேண்டும் என்ற அழுத்தம் விஜேதுங்கா மீது விழுந்துள்ளது.

விஜேதுங்கா இதனை விரும்புகிறாரோ இல்லையோ, இந்த அழுத்தத்துக்கு அவர் அடிபணிந்தே ஆக நேரிடும். விஜேதுங்காவை கட்சித் தலைமைத்துவத்தில் இருந்தும், ஜனாதிபதி வேட்பாளர் நிலையிலிருந்தும் விரட்டுவதற்காக கட்சியில் உள்ள பிரேமா அனுதாபிகள் விடும் அம்பாகவும் இந்த அழுத்தம் இருக்கக்கூடும்!

எப்படியோ ஜே ஆர் ஆட்சியிலும், பிரேமதாசா ஆட்சியிலும் விஜேதுங்கா ஆட்சியிலும், நிகழ்ந்த நிகழும் அட்டூழியங்கள் அராஜகங்கள், மோசடிகள், பாரபட்சங்கள், தலையீடுகள், அதிகார துஷ்பிரயோகங்கள், அதிகாரத்தனங்கள், உரிமை பறிப்புகள் என்பவற்றால் விளைந்த வாழ்க்கைப் பாதிப்புக்களை மக்கள் மறந்து விடுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. தேர்தலுக்காக சீனிக்குளிகை கொடுத்து மக்களை விலைக்கு வாங்கும் காலம் தென்னிலங்கையிலும் மலையேறிவிட்டது! இதனை ஐக்கிய தேசியக்கட்சி கண்டு கொள்வது எப்போது?

## விளையாட்டு நிகழ்வுகள்

ஆதரவற்ற சிறுவர்களின் வளர்ச்சி நிதிக்காக ராசிக்கிஸ் மின்னொளியில் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று இரவு சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் கழக அணிகள் வருமாறு:-

இரவு 7-00 மணி:- சென் மேரீஸ் வி. க. எதிர் விநாயகர் வி. க.

இரவு 8-15 மணி:- டயமன்ஸ் வி. க. எதிர் திருமலை நட்சத்திரங்கள் வி. க [உ]

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப். 8

அரியாலை கதேசிய திருநாள் கொண்டாட்ட பவள விழாவையொட்டிய — உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி ஆட்டங்கள் இன்று (வெள்ளிக்கிழமை) பிற்பகல் 3 மணி முதல் அரியாலை ச. ச. நிலைய மைதானத்தில் நடைபெறவிருக்கின்றன.

ஆட்டத்தில் பங்கு பற்றும் கழகங்கள் வருமாறு;-

★ சுழிபுரம் சத்தியா வி. க. அணி எதிர் கொக்குவில் பொற்பதி ச. ச. நி. அணி.

★ மல்லாகம் அ. அ. ச. வி. க. அணி எதிர் கொக்குவில் பொற்பதி ச. ச. நி "வி" அணி. (உ-3)

★ ★ ★

யாழ்ப்பாணம் வை. எம். சீ. ஏ. நடத்தும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை சென். ஜோன்ஸ் ஆடுகளத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகள் வருமாறு:-

★ 4 00 மணி:- பல்கலைக் கழக "பி" அணி எதிர் ஜொனியன்ஸ் அணி (கழக அணிகள்)

★ 5-00 மணி:- சென் ஜோன்ஸ் எதிர் சென் பற்றிக்ஸ் (கல்லூரி அணிகள்) [உ]

## விரைவோட்ட பயிற்சி முகாம்

யாழ்ப்பாணம், ஏப். 8

பாடசாலை மற்றும் கழகங்களைச் சேர்ந்த வீரர்களுக்கான விரைவோட்ட (Sprints) பயிற்சி முகாம் ஒன்று எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் நண்பகல் 1 மணிவரை யாழ் மத்திய கல்லூரியில் நடைபெறும்.

யாழ் மாவட்ட ஆமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம் ஏற்பாடு செய்துள்ள இந்தப் பயிற்சி முகாமை தகுதி வாய்ந்த பயிற்றுநர்கள் நடத்துவர்.

இந்த இலவசப் பயிற்சி முகாமில் கலந்து கொள்ள வரும் வீரர்கள் களத்தில் செயல்முறை நிகழ்வுகளில் பங்குபற்றக் கூடியதாக உடைகள் மற்றும் தமக்குரிய விளையாட்டு உபகரணங்களுடன் வருகை தருமாறு வேண்டப்பட்டுள்ளனர்.

யாழ் மாவட்டத்தில் பிரபல முன்னாள் மெய்வல்லுநர் வீரர் திரு. பொ. பஞ்சலிங்கம் பயிற்சி முகாமை ஆரம்பித்து வைப்பார். (க)

## ஆங்கிலப் பரீட்சை இங்கு நடக்கும்

யாழ்ப்பாணம், ஏப். 8

ஆங்கில தேசிய தராதரப் பத்திரப் (என் ஸி. ஈ)பரீட்சையின் பகுதி இரண்டு வாய்மொழி மூலப் பரீட்சை விரைவில் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளதாக பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. துரைதியாகராஜா தெரிவித்தார்.

இந்தப் பரீட்சை இன்று முதல் கொழும்பில் நடைபெறும் என முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது என்றும்—

தற்போது பரீட்சை இங்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருப்பதால் பரீட்சார்த்திகள் அதன் நிமித்தம் கொழும்பு செல்லத் தேவையில்லை என்றும் அவர் கூறினார். (இ-5)

## தட்டச்சு சுருக்கெழுத்து பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், ஏப்.8

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம் வதிரியில் தமிழ், ஆங்கில மொழிகளில் தட்டச்சு சுருக்கெழுத்துப் பயிற்சி வகுப்புகளை எதிர்வரும் 17 ஆம் திகதி முதல் ஆரம்பிக்க உள்ளது.

ஜி.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்த — பாடசாலையிலிருந்து விலகியோர் — மேற்படி பயிற்சி நெறியில் சேர்ந்து கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

[த-5]

# நீர்கொழும்பு குடாப்பாட்டில் தமிழரின் உடைமைகள் சூறை!

கொழும்பு, ஏப். 8

நீர்கொழும்பு குடாப்பாடு கிராமத்தில் நிலவிய பதற்றம் காரணமாக வெளியேறிய தமிழர்களின் வீடுகள் உடைக்கப்பட்டு உடைமைகள் சூறையாடப்பட்டுள்ளமை தற்போது தெரியவந்துள்ளது.

கடந்த 23ஆம் திகதி குடாப்பாடு கிராமத்தில் நிலவிய பதற்றம் காரணமாக அங்கு இருந்த 125 குடும்பங்கள் இடம்பெயர்ந்து நீர்கொழும்பு காளி கோயிலில் தங்கியிருந்தனர்.

மீண்டும் இம்மாத ஆரம்பத்தில் சகஜநிலை திரும்பியதையடுத்து அவர்கள் தமது வீடுகளைப் பார்க்கச் சென்றதாகவும்—

தமது வீடுகள் உடைக்கப்பட்டு உடைமைகள் சூறையாடப்பட்டிருந்ததை அறிய முடிந்ததாகவும்—அந்த தமிழ் அகதிகள் தெரிவித்தனர்

1990ஆம் ஆண்டு ஆரம்பித்த இராணுவ நடவடிக்கைகளினால் இடம் பெயர்ந்த வடபகுதி தமிழ்க் குடும்பங்களே அங்கு தங்கியிருந்தன,

## தமிழீழ பொதுக் கல்விக் தேர்வு:

# தேசியத் தலைவர் பிரபாவிடம் பரிசு பெறுவோர் விவரம்

யாழ்ப்பாணம், ஏப். 8

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை கடந்த வருடம் நடத்திய தமிழீழ பொதுக் கல்வித் தேர்வில் கூடுதல் புள்ளிகள் பெற்ற மாணவர்களுக்கு பரிசு வழங்கும் வைபவம் இன்று பிற்பகல் 2மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறுகின்றது.

தேர்வில் தேசிய, கோட்ட மட்டங்களில் கூடுதல் புள்ளிகள் பெற்று—

தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் வழங்கும் பணப் பரிசுகளையும், பாராட்டு சான்றிதழ்களையும் —

கல்வி மேம்பாட்டு பேரவையினர் வழங்கும் சான்றிதழ்கள் பரிசுகளையும் பெறுவோர் விவரம் வருமாறு;

தேசிய மட்டத்தில் முதல் 10 இடங்களை பெற்றோர்:

சிவதர்சினி - சிவசுப்பிரமணியம், வேம்படி மகளிர் கல்லூரி ஆறுமுகம் தேவராசா— வெஸ்லிதேவசுதன், ஹாட்லிக் கல்லூரி, குகாஜினி — திலைநாதன், வேம்படி மகளிர் கல்லூரி சுந்தரலிங்கம் — காந்தரூபன் பரியோவான் கல்லூரி, சுதந்திரபாலன் - கௌரிசங்கர் யாழ். இந்துக்கல்லூரி, சிவசுப்பிரமணியம் -சிவசாம்பவன் யாழ். இந்துக்கல்லூரி, நாகசந்திரா - கீர்த்தனன் பரியோவான் கல்லூரி, பாலச்சந்திரன் - பாலமுரளி பரியோவான் கல்லூரி, ஷவாணி-திருஞானசம்பந்தன் - சண்டிக்குளி மகளிர் கல்லூரி, கௌரி-நவரத்தினசோதி மெதடிஸ்த பெண்கள் உயர்தர பா.

கோட்ட மட்டத்தில் முதல் இரு இடங்களைப் பெற்றோர்;

நல்லூர் கோட்டம்;

உலகபிரகாசம் -ஜெயதீபன் யாழ். இந்துக் கல்லூரி, மகாலிங்கம் - அறிவழகன் யாழ். இந்துக்கல்லூரி.

யாழ் கோட்டம்;

பாமினி - தர்மலிங்கம் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, ஜொஷனி - திருவிளங்கம் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.

உடுவில் கோட்டம்;

ரஜித்தா - காந்தரட்ணம் உடுவில் மகளிர் கல்லூரி, சுதாஜினி - புலேந்திரன் உடுவில் மகளிர் கல்லூரி.

சங்கானைக் கோட்டம்;

நிலாணி - இராமச்சந்திரன் வட்டு. யாழ்ப்பாணக்கல்லூரி, செல்வராஜா - தவேந்திரன் வட்டு. யாழ்ப்பாணக்கல்லூரி, காராளசிங்கம் - சசிகரன் மானிப்பாய் இந்துக்கல்லூரி, ஜராணிகனி - யோகராஜா மானிப்பாய் மகளிர் கல்லூரி.

கோப்பாய்க் கோட்டம்;

ஜெயமாலா - தர்மலிங்கம் அத்தியார் இந்துக் கல்லூரி, சிவபாக்கியநாதன் - ஸ்ரீசோதி கோப்பாய்க் கிறிஸ்தவக் கல்லூரி.

தெல்லிப்பழைக் கோட்டம்;

இருச்செல்வி - திருவாதவூரன் யூனியன் கல்லூரி, சர்மிளா - சண்முகலிங்கம் யூனியன் கல்லூரி.

கிளிநொச்சி வலயம்

பளைக்கோட்டம்;

அபிராமி - ஆறுமுகம் பளை ம. வி., பொன்னுத்துரை - சுதன் பளை ம. வி.,

ஊர்காவற்றுறைக்கோட்டம்;

பெலிசியா பெலிக்ஸ் - அல்பேட் ஊர். புனித மரியாள் மகளிர் வி., புவனச்சந்திரன்- ரவீந்திரன் யாழ்ரன் கல்லூரி.

வேலணைக் கோட்டம்;

பரமானந்தன் - சாயிநேசன் புங்குடுதீவு ம. வி., பரஞ்சோதி - குணதீபன் சேர். வைத்திலிங்கம் து. ம. வி.

கரவெட்டிக் கோட்டம்;

சர்மிளா - தவேஸ்வரன் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, சராந்தினி-ஜெகநாதன் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

பருத்தித்துறைக் கோட்டம்;

கந்தசாமி - யோகநாதன் ஹாட்லிக் கல்லூரி, சிவம் ராஜாராம் ஹாட்லிக்கல்லூரி.

மருதனிகேணிக் கோட்டம்;

சிவமலர் - வேலுப்பிள்ளை ஆழியவளை சீ. சீ த. க.பா. துரைசிங்கம் - விஜயபாஸ்கர் ஆழியவளை சீ. சீ. த க பா.

சாவகச்சேரிக் கோட்டம்;

சாமுவேல் — துஷ்யந்தன் சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சுபாஜினி - இராசதுரை சாவகச்சேரி இந்துக்கல்லூரி

பரிசு பெறும் மாணவர்கள் இன்று நண்பகல் ஒரு மணிக்கு முன்னரே விழா மண்டபத்துக்குச் சமுகமளிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப் பட்டுள்ளது.

# மட்டு. நகரப் பகுதியிலும் இனி அதிரடிப் படையினர்

மட்டக்களப்பு நகரப்பகுதியிலும் இம்மாதம் முதல் விசேட அதிரடிப் படையினர் சேவையில் ஈடுபடுத்தப்படவிருக்கின்றனர்.

அம்பாறை மாவட்டத்திலும் மட்டக்களப்பின் நகரப் பகுதி தவிர்ந்த பகுதிகளிலும் விசேட அதிரடிப்படையினர் பணியாற்றி வந்தனர்.

அம்பாறை மாவட்டத்தில் இருந்து ஆரயம்பதி வரையான 17 மைல் தூரத்திலேயே இவர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

மட்டக்களப்பு நகரில் இதுவரை பொலீஸார் பணியாற்றிவந்தனர். [த-3]

# ஜி. சீ. ஈ; (சா. த.) பரீட்சை: பாடசாலை பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், ஏப். 8

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். மாவட்டத்தில் வெளியான ஜி. சீ. ஈ. (சாதாரண தர) பரீட்சையில் சில பாடசாலைகள் பெற்ற உச்ச பெறுபேறுகளின் விவரம் நேற்று முன்தினம் உதயனில் வெளியாகியிருந்தது. மற்றும் பல பாடசாலைகளின் திறமைப் பெறுபேறுகள் வருமாறு:

பருத்தித்துறை சித்திவிநாயகர் வி.— 4டி 3சி 1எஸ்.

தொண்டமனாறு வீரகத்தி ம. வி. — 3டி 4சி (மூவர்)

தம்பசிட்டி சிவப்பிரகாச ம. வி. 3டி 4சி

புற்றளை ம. வி. — 5டி 2சி 1எஸ்

மருதங்கேணி இ. த. க. பா.—2டி 4சி 1எஸ் (இருவர்)

ஆழியவளை சி. சி த. க. பா.—4டி 3சி 1எஸ் (இருவர்)

உடுத்துறை ம. வி. — 3டி 4சி

செம்பியன்பற்று அ. த. க. பா. - 2டி 3சி 1எஸ் (இருவர்)

நாகர் கோயில் ம. வி. — 2டி 4சி 1எஸ் (இருவர்)

ஹாட்லி — 7டி

பருத்தித்துறை மெதடிஸ் உ. பெ. பா.— 7டி (இருவர்)

வடமராட்சி இந்து — 5டி 2சி (3 பேர்)

வேலாயுதம் ம. வி. — 3டி 3சி 1எஸ் (3 பேர்)

வல்வை மகளிர் — 5டி 2சி (3 பேர்)

சிதம்பரா — 3டி 3சி 1எஸ் (3 பேர்)

வல்வை சிவகுரு வி. — 5டி 3சி (இருவர்)

பருத்தித்துறை கலட்டி றோ. க. பா.—1டி 5சி 1எஸ்

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் — 7டி (இருவர்)

உடுப்பிட்டி மகளிர் — 6டி 1சி

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி — 7டி

கரவெட்டி விக்னேஸ்வரா— 4டி 4சி

நெல்லியடி ம. வி. — 5டி 2சி

கரவெட்டி இருதயக் கல்லூரி — 4டி 3சி

கம்பர்மலை அ த க. பா.— 4டி 8சி

அம்பன் அ.மி.த. க. பா.— 2டி 3சி 2எஸ்

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி— 4டி 3சி

[illegible] (மூவர்)

நடேஸ்வரா— [illegible]

கந்தரோடை தமிழ் கந்தையா வி.— 2டி 2சி 2எஸ்

இராமநாதன் கல்லூரி— 6டி 1சி 1எஸ்

இணுவில் மத்தியகல்லூரி— 6டி 2சி

இணுவில் இந்து — 2டி 3சி 2எஸ் (இருவர்)

மகாஜனா— 6டி 2எஸ்

யூனியன் — 6டி 1சி (இருவர்)

உடுவில் மகளிர்— 7டி (மூவர்)

மானிப்பாய் மகளிர்— 5டி 2சி (மூவர்)

மானிப்பாய் இந்து— 6டி 1சி 1எஸ்

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வி — 3டி 4சி

மானிப்பாய் மெமோறியல்— 3டி 3சி

இளவாலை மெய்கண்டான்— 4டி 3சி (இருவர்)

மாதகல் சென்ஜோசப் ம. வி.— 5டி 2சி

வயாவிளான் ம. வி — 6டி 1சி

இடைக்காடு ம. வி. — 4டி 3சி 1எஸ் (மூவர்)

சண்டிலிப்பாய் இந்து ம. வி. 3டி 3சி 1எஸ் (இருவர்)

புங்குடுதீவு ஸ்ரீகணேச ம. வி. — 2டி 3சி 2எஸ்

புங்குடுதீவு ம. வி.—6டி 1சி

நவாலி ம. வி.— 2டி 2சி 1எஸ்

காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வி — 1டி 3சி 2எஸ்

அராலி சரஸ்வதி ம. வி.— 4டி 2சி 1எஸ் (இருவர்)

அராலி இந்து — 2டி 2சி 3எஸ்

வட்டு. திருஞானசம்பந்தர் வி.— 2டி 2சி (நால்வர்)

யாழ்ப்பாணக்கல்லூரி— 6டி 1சி 1எஸ்

வட்டு இந்து —6 டி 2சி

விக்ரோறியா — 6டி 1சி 1எஸ்

பண்ணாகம் மெய்கண்டான் — 3டி 5சி

பண்டத்தரிப்பு இந்து— 2டி 3சி 2எஸ்

அத்தியார் இந்து — 6டி 1சி 1எஸ்

சாவகச்சேரி மகளிர் — 3டி 4சி

சாவகச்சேரி இந்து— 7டி 1சி

வரணி ம. வி.—4டி 3சி

டிறிபேர்க் — 6டி 2சி

கைதடி விக்னேஸ்வரா வி.— 4டி 2சி (இருவர்)

மீசாலை வீரசிங்கம் ம. வி— [illegible]

[illegible]

உரும்பிராய் இந்து— 4டி 4சி

## தமிழீழ கல்வி மேம்பாட்டு நிதியம்

யாழ்ப்பாணம், ஏப். 8

யாழ்ப்பாணம், நல்லூர்க் கோட்டத்தைச் சேர்ந்த தமிழீழ கல்வி மேம்பாட்டு நிதிய வைப்புவிழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது இந்த நிதியவைப்புவிழாவில் நிதி ஒப்படைக்க இருக்கும் சுல வர்த்தகர்கள், அரச சார்பு நிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், பாடசாலை அபிவிருத்திச் சபைகள் அன்றைய தினம் வைப்புச் செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(க-163)

## தொண்டு நிறுவன பிரதிநிதிகள்

# விமான மூலம் வடக்கே வர படையினர் கட்டுப்பாடு!

யாழ்ப்பாணம், ஏப். 8

கொழும்பில் இருந்து தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் அரச அதிகாரிகள் விமான மூலம் வடக்கே வர படையினர் கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர்.

இதுவரை காலமும் விரும்பிய நேரத்தில் அவர்கள் விமானமூலம் வர வசதி செய்யப்பட்டிருந்தது.

வெளி இடங்களில் இருந்து படையினரை குடாநாட்டுக்கு அனுப்ப விமானங்கள் பயன்படுத்த வேண்டியுள்ளதால் தொண்டர் அமைப்பு பிரதிநிதிகளுக்கு விமான வசதி வழங்க முடியாதுள்ளதாக பாதுகாப்பு ஒருங்கிணைப்பு குழு அலுவலக அதிகாரி பிரிகேடியர் ஜி.பி. குலதுங்கா தொண்டர் நிறுவனங்களுக்கு தெரிவித்திருந்தார்.

அந்த விடயம் குறித்து தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகள் அவருடன் பேச்சு நடத்தியதன் பேரில்—

பிரதி திங்கட்கிழமை இரத்மலானையில் இருந்து பலாலிக்கும், புதன்கிழமைகளில் பலாலியில் இருந்து இரத்மலானைக்குப் சொற்ப அளவு விமான ஆசனங்களை வழங்க அவர் இணங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

## வடக்கு - கிழக்கு மாகாண

# வறிய மாணவர்களுக்கு கல்வி வளர்ச்சி நிதியம்

வடக்கு - கிழக்கு மாகாண ஏழை மாணவரின் கல்வி வளர்ச்சிக்கான நிதியம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது

கல்வி வளர்ச்சி, பிரதேச வணக்கஸ்தலங்களை புனருத்தாரணஞ் செய்வது ஆகியன வற்றை இந்நிதியம் மேற்கொள்ளும் என்று மாகாண சபையின் பிரதம செயலாளர் திரு. எஸ். கணேசநாதன் தெரிவித்தார்.

இத்தகைய நிதியம் ஒன்று இம்மாகாணத்தில் நிறுவப்படுவது இதுவே முதல் தடவை என்று தெரிவிக்கப் படுகிறது.

இந்நிதியத்துக்கு திருமதி மனோகரி முத்தெட்டுகமுவ 50 லட்சம் ரூபா பணத்தை மாகாண ஆளுநர் திரு. லயனல் பெர்னாண்டோவிடம் கையளித்தார் என்று தெரிவிக்கப்படுகிறது. (த-எ-6)

## மாகாண சபைக்கு அனுப்பி வைத்த

# யாழ். கல்வி அலுவலக கோவைகள் திரும்பி வந்தன

யாழ்ப்பாணம், ஏப். 8

யாழ். கல்வி அலுவலகத்தில் இருந்த சில அதிகாரிகள் வடக்கு- கிழக்கு மாகாண கல்வியமைச்சுக்கு கைமாறிய பின்னர் — யாழ். கல்வி அலுவலகத்தில் இருந்து சென்ற சேவை நீடிப்பு மற்றும் ஓய்வூதியக் கோவைகள் மீண்டும் திரும்பி வந்துள்ளன.

சேவை நீடிப்பு மற்றும் ஓய்வூதியக் கோவைகள் முறைப்படி பூரணப்படுத்தப் படவில்லை என்ற காரணத்தை காட்டியே மாகாண கல்வியமைச்சு அவற்றை திருப்பி அனுப்பியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதுவரை காலமும் இவ்வேலைகள் யாழ். கல்வி அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படும் போது, அதில் சம்பந்தப்பட்டவர்கள் தேவையான திருத்தங்களை மேற்கொள்ள முடிந்தது என்றும் —

கோவைகளில் ஏதாவது பிழை இருப்பின் மாகாண கல்வியமைச்சு திருப்பியனுப்புவதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

இதனால் ஏற்படும் வீண் காலதாமதத்தால் ஆசிரியர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (த-3)

# பூநகரி முகாம் சிப்பாய் நுவரெலியாவில் கைது!

கொழும்பு, ஏப். 8

பூநகரி இராணுவ முகாமில் பணிபுரியும் சிப்பாய் ஒருவர் நுவரெலியாப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

அச்சமயம் அவரது பயணப் பையினுள் ரி 56 ரைபிளுக்குரிய 14 ரவைகள் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டது

சோதனைச் சாவடி ஒன்றில் அச்சிப்பாயை பொலிஸார் தடுத்து சோதனையிட்ட போதே இது தெரியவந்தது.

பூநகரி முகாமில் இருந்து ரவைகளை அச்சிப்பாய் கையாடல் செய்தார் என்பது பூர்வாங்க விசாரணையில் தெரியவந்தது. (த-எ)

# உட்கட்சி பூசல் தீவிரம்; இக்கட்டான நிலையில் டி. பி.

கொழும்பு, ஏப். 8

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியில் உட்பூசல் தீவிரமடைந்திருப்பதாகவும் —

இதனால் ஜனாதிபதி விஜேதுங்கா அசௌகரிய நிலைக்கு ஆளாகியுள்ளார் என்றும் அரசியல் அவதானிகளை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் சிங்களச் சேவை அறிவித்தது.

கட்சிக்குள் நிலவும் கோஷ்டி மோதல் காரணமாக காமினி திஸநாயக்காவை தாம் முன்னர் திட்டமிட்டபடி எம். பியாக்கி அமைச்சர் பதவி வழங்க முடியாத இக்கட்டான நிலையில் ஜனாதிபதி விஜேதுங்கா உள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது

# புலிகளின் ஆயுதத் தேவை படையினரால் பூர்த்தி!

## சங்கர் ராஜி சொல்கிறார்

கொழும்பு, ஏப் 8

விடுதலைப் புலிகளின் ஆயுதத் தேவைகளில் 72 - 75 சதவீதமானவை அரச படையினரின் 'நல்லெண்ணங்களினால்' தான் பூர்த்தி செய்யப்படுவதாக பல பகுப்பாய்வாளர்கள் ஏற்றுக் கொள்கின்றனர்.

கொழும்பில் இயங்கும் ஈரோஸ் அமைப்பு தலைவர் சங்கர் ராஜி முன்கண்டவாறு சண்டே ஐலண்டுக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

"விடுதலைப் புலிகளின் இராணுவ வலிமையை குறைக்க எடுக்கப்பட்ட முயற்சிகள் எல்லாம் விரும்பிய பலனைத் தரவில்லை அதற்கு முரணாக விடுதலைப் புலிகள் தம்மிடமுள்ள ஆயுதங்கள் மற்றும் கைப்பற்றிய ஆயுதங்களுடன் நீண்ட கால யுத்தம் ஒன்றை மேற்கொள்ள கூடிய நிலைமையை உருவாக்கியுள்ளது.

இராணுவக் கோணத்தில் இருந்து பார்ப்பின், கண்ணுக்குத் தெரியும் எதிர்காலத்தில் யுத்தத்துக்கு முடிவு வரும் போன்று தெரியவில்லை இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காண முடியாது

— இவ்வாறு சங்கர் ராஜி தெரிவித்தார் (த-எ)

காட்டில் மரங்களைத் தறிக்காதீர்
நாட்டின் வளங்களைக் குறைக்காதீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எடிசன் அக்கடமி

யாழ்; இந்து அருகில் 411/1 கே. கே. எஸ். வீதி. யாழ்ப்பாணம் | கொக்குவில் இந்து அருகில் 27 கே. கே. எஸ். வீதி. கொக்குவில்.

எமது இரு நிறுவனத்திலும்
O/L DAY CLASS
ஆரம்பம்; 12-04-1994
செவ்வாய் 8மணி

★ எமது வழமையான யாழ். பிரபல ஆசிரியர் குழு
★ அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக்கொள்ளலாம்.

[சி-7707]



ஆதரவற்ற சிறார்களின் வளர்ச்சி நிதிக்காக
## 'ராசி சில்க்ஸ்'
ஆதரவில்
## மின்னொளியில் மிளிரும்
## உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி - 1994

இடம்:- பரி. யோவான் கல்லூரி மைதானம்
காலம்:- 08-04-1994 இரவு 7 மணி
பிரதம விருந்தினர்:- திரு. த. அருணகிரிராஜா (உதவிக் கல்விப் பணிப்பாளர் — உடற்கல்வி, கல்வி வலயம் - I)

பங்குபெறும் அணிகள்!
சென். மேரீஸ் வி. க. எதிர் விநாயகர் வி. க.
டயமன்ஸ் வி. க. எதிர் திருமலை நட்சத்திரங்கள் வி. க.

பிரவேசம்:- ரூபா 25/-

[சி/7702]



# அறிவித்தல்

07-04-94 இல் இருந்து பாடும்மீன் விளையாட்டுக் கழகம் இனி எந்த ஒரு உதைபந்தாட்டப் போட்டியிலும் கலந்து கொள்வதில்லை என்பதை எமது கழக அன்பர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் மிகவும் மனவருத்தத்துடன் அறியத்தருவதுடன் 03-04-94 இல் நடந்த விளையாட்டுப் போட்டியில் குழப்பம் விளைவித்தவர்களை காவல் துறையிடம் ஒப்படைத்துள்ளோம் என்பதையும் அறியத்தருகின்றோம்.

நிர்வாகம்
பாடும்மீன் வி/க,
குருநகர்.

(30297)



# இந்துவின் இதய அஞ்சலி

எமது வகுப்பு மாணவன் செல்வன் க. காண்டீபனின் தந்தையாராகிய திரு வே. கருணாநிதி அவர்களின் திடீர் மரணத்தையிட்டு துயரடைகிறோம். அன்னாரது குடும்பத்தினருக்கு எமது அநுதாபங்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

ஆண்டு 13 B மாணவர்கள்
யா. இ. க.

(கி/7717)



# சுபேன்

(பிரத்தியேக வகுப்பு)
[எழிலகத்திற்கு அருகில்]

A/L 96
அளவையியல்
திரு. சோதிலிங்கம்
சனி, ஞாயிறு
6.00 — 8.00

(30295)



# கெயின்ஸ்

கல்வி நிறுவனம்
(கிறிஸ்தவ கல்லூரி முன்பாக)
பிரதான வீதி,
கோப்பாய்.

A/L - 96
வகுப்புகள்
ஆரம்பம்: 11-04-94
திங்கள் 1 மணிக்கு

பொருளியல்: —
திரு. மகேந்திரன்
கணக்கியல் —
திரு. D SAM
வர்த்தகம் —
திரு. பசில்
அளவையியல் —
திரு. சயந்தன்,
திரு. சர்மா
தமிழ் —
திரு. குழந்தை
இந்து நாகரிகம் —
திரு. பாலா
இந்துசமயம் —
திரு. கிரிதரன்
அரசியல் —
திரு. கியூபேட்
புவியியல் —
திரு. யோசலின்
கிறிஸ்தவம் —
பிரபல ஆசிரியர்

A/L 94 க்கான மீட்டல் வகுப்புகள் ஆரம்பமாகின்றன. நேர அட்டவணையை நேரில் பெறவும்.

SPOKEN ENGLISH
Mr BRITTO

இயக்குநர்
(7059)


ஒட்டோ,...

யளித்து நடவடிக்கையெடுக்கப்படுகின்றது. எவ்வாறாயினும் பெறுபேறுகளை எடுத்துவருவதற்கு வலயம் 11 அலுவலகத்திலிருந்து ஒட்டோ வாகனம் பருத்தித்துறைத் துறைமுகத்திற்குச் சென்றபோது பெறுபேறுகளைக்கொண்டுவந்த அதிகாரி பருத்தித்துறையிலிருந்து புறப்பட்டு விட்டதாகத் தெரியவந்தது. —என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் குறிப்பு

1. பரீட்சை முடிவு வந்து சேருவதில் தாமதம் ஏற்பட்டதை கல்விப் பணிப்பாளர் மறுக்கவில்லை.

2. தபால் திணைக்களம் உட்பட பல திணைக்களங்கள் இப்போது வாகனம் ஒன்று கூட இல்லாத நிலையில் தம்மால் இயன்றளவு வேகத்துடன் இயங்கி வருகின்றன.

3. ஈழம் யுத்தம் - 2 ஆரம்பமான பின்னர் பல தடவைகள் பரீட்சை முடிவுகள் வெளிவந்து விட்டன. கிளாலி, ஊரியான் பாதை ஊடாகக்கூட பரீட்சை முடிவுகள் எடுத்து வரப்பட்டன. அப்போது கல்வித் திணைக்களத்திடம் ஒரு "ஒட்டோ"கூட இருக்கவில்லை.

4. திணைக்களத்தின் தேவை குறித்து உரிய முறையில் உரியவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டிருந்தால், கல்வித் திணைக்கள நடவடிக்கைகளுக்கு அவ்வப்போது பக்கபலமாக இருந்து செயற்பட்டு வரும் கல்வி மேம்பாட்டுப் பேரவை போன்ற அமைப்புகள் மாணவர்களின் நன்மை கருதி அவர்களின் பரீட்சை முடிவுகளை எடுத்து வர வாகன வசதி செய்து கொடுத்திருக்கும் அல்லவா?

5. பரீட்சை முடிவுகள் வருவது குறித்து முதல் நாளே —போதிய நேர அவகாசத்துடன் — கல்வித் திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அதனால் பரீட்சை முடிவுகளை உடனடியாக எடுத்துவர முன்னேற்பாடு செய்திருக்கலாம் அல்லவா?

6. பரீட்சை முடிவுகளை எதிர்பார்த்திருந்த மாணவர்கள், பெற்றோர்களின் மனநோவைப் பிரதிபலித்தே அச்செய்தியை வெளியிட்டிருந்தோம்.

7. யுத்தத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் வடபகுதி மக்கள் இன்று அதிகாரிகளிடம் எதிர்பார்ப்பது அவர்களின் வசதிகளை அல்ல. இருக்கும் வசதியீனங்களுக்கு மத்தியில் திறமையான சேவையைத்தான்.

[ஆ-ர்]

இலங்கை பங்குபற்றமா...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தகைமைப் பரிசோதனைக்கு உட்படுத்தப் படவேண்டும் என்று விளையாட்டுத்துறை அமைச்சர் நந்தா மத்தியூ விடுத்த உத்தரவைத் தொடர்ந்தே இத்தகராறு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையில் — கிரிக்கெட் தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்கும் ஏழு உறுப்பினர்களில் ஐந்து பேர் ராஜினாமாச் செய்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தகராறு காரணமாக சார்ஜா கிரிக்கெட் போட்டியில் இலங்கை கலந்து கொள்ளுமா என்பது சந்தேகத்துக்கிடமாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-எ-6)

## தமிழ் வளர்ச்சி கழக பரிசு பெறுவோர்

யாழ்ப்பாணம், ஏப். 8

தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வில் தமிழ் மொழி பாடத்தில் தேசிய மட்டத்தில் கூடுதல் புள்ளிகளைப் பெற்று தமிழ் வளர்ச்சிக் கழகம் வழங்கும் பணப் பரிசையும் பாராட்டிதழையும் பெறும் மாணவர்கள் வருமாறு:

1. சிவதர்சினி சிவசுப்பிரமணியம் வேம்படி மகளிர் கல்லூரி [96 புள்ளிகள்].
2. சதானந்தன் சேந்தன் யாழ். இந்துக் கல்லூரி (94 புள்ளிகள்).
3. மகேந்திரம் உமாகாந்தன் ஹாட்லிக் கல்லூரி (93 புள்ளிகள்).
4. சிவபுண்ணியம் சசிகுமார் ஹாட்லிக் கல்லூரி (93 புள்ளிகள்).

முதலாவது இடத்தைப் பெறுபவர் மூவாயிரம் ரூபாவையும், இரண்டாமிடத்தைப் பெறுபவர் இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவையும் மூன்றாமிடத்தைப் பெறுபவர்கள் இரண்டாயிரம் ரூபாவையும் பெறுகின்றனர். இவர்களுக்கான பரிசில்கள் பரிசளிப்பு விழாவில் வழங்கப்படும். (இ)

## சந்திரசேகரம் சத்தியப்பிரமாணம்

கொழும்பு, ஏப். 8

மலையக மக்கள் முன்னணியின் தலைவர் திரு. பெ. சந்திரசேகரன் மத்திய மாகாண சபை உறுப்பினராக இம் மாதம் 11 ஆம் திகதி காலை பத்து மணிக்கு சத்தியப்பிரமாணம் செய்துகொள்வார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து இம் மாதம் 19 ஆம் திகதி நடைபெறும் மத்திய மாகாணசபையின் கூட்டத்தில் இவர் கலந்து கொள்வார் என்று அறிவிக்கப்படுகிறது.

கூட்டுப்படைத் தலைமையகக் குண்டு வெடிப்புச் சம்பவத்தின் சூத்திரதாரி என்று சந்தேகிக்கப்பட்ட வரதன் என்பவருக்குப் புகலிடம் கொடுத்தார் என்ற சந்தேகத்தின் பேரில் 4-7-1992 முதல் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த இவர் கடந்த மாதம் 18 ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டார்.

தடுப்புக் காவலில் இருந்தபடியே இவர் போட்டியிட்டு மத்திய மாகாணசபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். (இ-எ)

## நம்பிக்கையில்லா பிரேரணை விவாதம்

யாழ்ப்பாணம், ஏப். 8

ஐ. தே. க. அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டு வந்துள்ள நம்பிக்கை இல்லாப் பிரேரணை மீதான விவாதம் எதிர்வரும் 20 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நடைபெறவிருக்கிறது.

சபாநாயகர் எம். எச். முஹம்மதுவின் தலைமையில் கூடிய கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (இ-3)

வன்னியில்----
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திகதிகளில் முல்லைத்தீவு மாவட்டத்திலும்—

22ஆம், 23ஆம், 24ஆம் திகதிகளில் வவுனியா மாவட்டத்திலும் — பண்பாட்டுப் பவனி நிகழ்வுகள் நடைபெறும்.

மன்னார் மாவட்டம் பண்டிவிரிச்சான் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும் நிகழ்வுகளுடன் பண்பாட்டுப் பவனி ஆரம்பமாகிறது. (அ)

பிக்குகள்----
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானிக்கப்படும்.

பௌத்த குருமாரின் பயணம் மதகுருமாரின் நல்லெண்ண விஜயமாகவே அமையும் என்றும் அரசாங்கத்தின் தூதுக்குழுவாக அமையாது என்றும் தெரிவிக்கப்பட்டது. [அ]

அஷ்ரப்பும்...
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

னர் எனது பிரியாவிடை உரை நிகழ்த்த அனுமதிக்க வேண்டும்.

இப்படி அவர் கேட்டுக் கொண்டார்.

சபாநாயகர் இக்கோரிக்கையை ஏற்க முடியாது எனக் கூறினார்.

அதைத் தொடர்ந்து அஷ்ரப்பும் கட்சியின் ஏனைய உறுப்பினர்களும் சபையில் இருந்து வெளியேறினர். (இ-3)


# மன்ற அரங்கில்

என்ன புதுமை! என்ன இனிமை!

## மாபெரும் இசை நிகழ்ச்சி

திருமறை கலாமன்றம் வழங்கும்

## பத்தே பத்து
(TEN COMMANDMENTS)
MUSICAL

ஞாயிறு தினம் 10-04-94 | ஞாயிறு மாலை 6-45

● எண்பது அடி மேடையிலே!
● ஐம்பதுக்கு மேற்பட்ட கலைஞர்கள்!
● கானமழை பொழிகிறார்கள்!
● காட்சிதனில் வருகிறார்கள்!

10 கட்டளை காட்சிகளில் | 10 காட்சிகள்

தவறாது பாருங்கள்

ஆசனப் பதிவு இடம்பெறும்



# பொதுக் கூட்டம்

விஞ்ஞானபீட மாணவர்களுக்கான பொதுக் கூட்டம் ஒன்று 08-04-1994 காலை 10-00 மணிக்கு நடைபெற இருப்பதால் சகல விஞ்ஞான பீட மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பா. குமரவேள்,
செயலாளர்,
விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியம்.

விஞ்ஞானபீடம்,
யாழ் பல்கலைக்கழகம்.

(30294)



# A\L 96 கலை, வர்த்தக பிரிவு
## ஆரம்பம் 9-4-94 சனி

| | |
|---|---|
| பொருளியல் | தமிழ் |
| திரு. E. பிரபாகரன் | திரு. வைகுந்தநாதன் |
| கணக்கியல் | அளவையியல் |
| திரு. சௌந்தி | திரு. யுகபாலசிங்கம் |
| வர்த்தகம் | இந்துநாகரிகம் |
| திரு. பசில் | திரு. நாகேஸ்வரன் |
| கிறிஸ்தவம் | புவியியல் |
| திருமதி A. மல்லிகா | திரு. இக்னேசியஸ் |

A\L 96 விஞ்ஞான வகுப்புகளும்
ஆரம்பமாகின்றன:

SHAMROCK
யாழ். சுண்டுக்குளி

[30290]



# ஹரியற் உவின்சிலோ அம்மையார்
## நினைவு தினம்

1824 இல் உடுவில் மகளிர் கல்லூரியை ஸ்தாபித்த ஹரியற் உவின்சிலோ அம்மையார் நினைவு தினம் 09-04-94 சனிக்கிழமை பி. ப. 4.00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் அனுஷ்டிக்கப்படுகின்றது.

நிகழ்வுகள்:
## நினைவுப் பேருரை
பேராயர் கலாநிதி எஸ். ஜெபநேசன்
## நாடகம்
உடுவில் மகளிர் கல்லூரி மாணவிகள்

அனைவரும் அன்பாக அழைக்கப்படுகின்றீர்கள்.

அ. ஜெயக்குமாரன்
செயலாளர் - தெ. இ. யா. ஆ.

(சி/7490)



# மரண அறிவித்தல்கள்

## டாக்டர் S. A. டானியேல்
(அருந்தவராசா)

அல்வாய் வடமேற்கைச் சேர்ந்த Dr S. A. Daniel 27-03-94 இல் லண்டனில் காலமானார். இவர் காலஞ்சென்ற சின்னத்தம்பி (ஆசிரியர்) லண்டனில் வசிக்கும் செபமணியின் சிரேஷ்ட புத்திரனுமாவார். இவருடைய நல்லடக்க ஆராதனை லண்டனில் நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றேன்.

தகவல்:
சின்னத்தம்பி றொபேட்
கணேசராசா
(சகோதரன்)

"செபவாசா"
அல்வாய் வடமேற்கு,
அல்வாய்

(30291)

## இராமகிருஸ்ணன் கனகம்மா

இல 82, மணிக்கூண்டு வீதியைச் சேர்ந்த கனகம்மா காலமானார் இவர் இராமகிருஸ்ணனின் (மோகன்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற பொன்னையா நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (8-4-94) பிற்பகல் அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் 3 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:-
இராமகிருஸ்ணன்

82, மணிக்கூண்டு வீதி,
யாழ்ப்பாணம்.

[30298]

## வே. கருணாநிதி
கணக்காளர்
(Rapid Result Institute, விரிவுரையாளர் C.I.M.A)

வே. கருணாநிதி காலமாகிவிட்டார் இவர் காலஞ்சென்ற அல்வாய் வடக்கு, வேலுப்பிள்ளை – கனகம்மா தம்பதியினரின் அன்பு மகனும், தயாநிதியின் (புள்ளி விபரக் கிளை, யாழ் செயலகம்) அன்புக் கணவரும், காண்டீபன் (யாழ் இந்துக் கல்லூரி), கார்த்திகா, காவேரி [சுண்டிக்குளி மகளிர் கல்லூரி], சஜன் [கனகரத்தினம் ம. ம. வி] ஆகியோரின் அன்புத்தந்தையும், திருமதி கமலாவதி [டென்மார்க்], சிவயோகன், [பெருந்தெருக்கள் திணைக்களம் முல்லைத்தீவு]. செல்வயோகன் [சுவிற்சிலாந்து] ஆகியோரது அன்புச் சகோதரருமாவார்.

ஈமக்கிரியைகள் நாளை [9-4-94] சனிக்கிழமை காலை 10 மணியளவில் 212, கச்சேரி நல்லூர் வீதியிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவல்:-
குடும்பத்தினர்

[30299]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 392/8 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 08-04-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org